**கமெண்ட் கந்தர்...**

மலையக தமிழ் எம்.பிக்களின் ஒற்றுமையில கண்பட்டிட்டுது போல..



Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 94 சுபகிருது வருடம், ஐப்பசி மாதம் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (01.11.2022) ஹிஜ்ரி 1444, ரபிஉல் ஆகிர் - 06, 0115886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60

**உஷ்**



தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைமையக திறப்புக்கு சென்றிருந்த இந்திய உயர்ஸ்தானிகர், அங்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித்துடன் தனிப்பட்ட முறையில் நீண்ட நேரம் பேசியதாக தகவல்.

முக்கியமான அரசியல் விடயங்கள் இங்கு பேசப்பட்டதாக தெரிகிறது. மலையக தமிழ் எம்.பிக்கள் ஒற்றுமையாக சேர்ந்து மேடையேறியதன் பின்னணியிலும் இந்தியாவே இருப்பதாக மற்றுமொரு தகவல் தெரிவித்தது.

## விவசாயம் உள்ளிட்ட அனைத்துக்கும் வரி

### வேறு வழியில்லையென்கிறார் ஜனாதிபதி ரணில்

விவசாயம் உள்ளிட்ட அனைத்துக்கும் வரி அறவிட வேண்டியுள்ளது. அதனைத் தவிர, எம்மிடம் வேறு வழியில்லை. நாம் அதை படிப்படியாக செய்திருக்கலாம் என்று நான் நினைத்தாலும் எமக்கு பணம் தேவைப்பட்டதால் எம்மால் அவ்வாறு செய்ய முடியவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## நாட்டின் நெருக்கடி நிலைக்கு சுதந்திரக் கட்சியும் காரணம்

### ராஜபக்ஷக்களையும் சாடுகிறார் துமிந்த எம்.பி.

(நா. தினுஷா)

நாட்டின் பின்னடைவுக்கும், தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமைக்கும் ராஜபக்ஷக்களே காரணம் என்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. அவர்கள் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவதுபோன்று, ராஜபக்ஷக்களுக்கு ஊக்கம் வழங்கி, வாழ்வுகொடுத்த சுதந்திரக் கட்சியும் நாட்டின் தற்போதைய நிலைமையை பொறுப்பேற்க கடமைப்பட்டுள்ளது. இந்த நெருக்கடிக்கு சுதந்திரக் கட்சியும் காரணம் என்பதால் நாட்டை..

02 பக்கம்







# கூட்டணிக்குள் போர்க்கொடி!

### த.மு.கூ. தலைமையக திறப்பு விழாவுக்கு ஜீவனை அழைத்தமையால் பெரும் சர்ச்சை

(நமது விசேட செய்தியாளர்)

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமையகத் திறப்புவிழா டிக்கோயாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோது சிறப்பு விருந்தினராக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் எம்.பி. அழைக்கப்பட்டமைக்கு எதிராக கூட்டணியின் எம்.பிக்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

இது தொடர்பில் தமது கடும் எதிர்ப்பை கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பியிடம்...

02 பக்கம்



கந்தசஷ்டி விரதத்தை முன்னிட்டு வரலாற்றுப் புகழ்மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் சூரசம்ஹாரம் நேற்றுமுன்தினம் (30) இடம்பெற்றது. (படப்பிடிப்பு: யாழ். செய்தியாளர்)

## ஹிக்கடுவவில் துப்பாக்கிச் சூடு இருவர் பலி

(நா. தினுஷா)

ஹிக்கடுவ, திராணகம பிரதேசத்திலுள்ள சுற்றுலா ஹோட்டலொன்றுக்கு அருகில் இருவரை இலக்குவைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பத்தில், படுகாயங்களுக்குள்ளான இருவரும் உயிரிழந்துள்ளனா்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நேற்றுக் காலைஇடம்பெற்றுள்ளதுடன், மோட்டார் சைக்களில் வந்த இருவரினால் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

02 பக்கம்

## அமுலுக்கு வந்தது 21ஆவது திருத்தம்



நாடாளுமன்றத்தின் விசேட பெரும்பான்மையுடன் அண்மையில் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புக்கான இருபத்திரெண்டாம் திருத்தச் சட்டமூலத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (31) தனது கையொப்பத்தை இட்டு...

02 பக்கம்

## குஜராத்தில் பாலம் கவிழ்ந்து 141 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

10 பக்கம்

## வெளிநோயாளர் பிரிவு முடங்கும் அபாயம்

(நா. தினுஷா)

வரையறுக்கப்பட்ட வளங்களை முறையாக முகாமைத்துவம் செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளதால் மருந்துத் தட்டுப்பாட்டுக்கப்பால் மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்ட வெளிநோயாளர் பிரிவில் முன்னெடுக்கப்படும் பரிசோதனைகள் மட்டுப்பட்டுள்ளதாகவும் நிலைமை நீடித்தால் அரச மருத்துவமனைகளின் வெளிநோயாளர் பிரிவு முழுமையாக முடங்கும் நிலை உருவாகுமெனவும் அரசாங்க மருத்துவ ...

02 பக்கம்

## தொழிலற்ற பட்டதாரிகள் பிரச்சினைகளுக்குத் தீர்வு

### அமைச்சர் சுசில் பிரேமஜயந்த உறுதி

(நா. தினுஷா)

தொழிலற்ற பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்கு வெகுவிரைவில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும். அதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, அதற்கு சிறிது கால அவகாசம் வழங்க வேண்டும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

02 பக்கம்

## பாடசாலைக் கல்வியை நிறுத்திய ஆதிவாசிகள்

### பட்டினியைத் தவிர்க்க காட்டுக்குச் செல்வதாக கவலை


உணவு மற்றும் பாடசாலை உபகரணங்களை கொள்வனவு செய்ய முடியாத காரணத்தினால் திம்புலாகல பழங்குடியினர் வசிக்கும் 8 கிராமங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் தமது பாடசாலைக் கல்விப் பயணத்தை முற்றாக கைவிட்டுள்ளதாக ஆதிவாசிகளின் தலைவி தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவை தலுகான கிராமத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய...

02 பக்கம்

## பேக்கரி உற்பத்திகளின் விலைகள் குறைப்பு



(த. யுவராஜ்)

பாண் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளை 10 ரூபாவால் குறைப்பதற்கு அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளதாக நேற்று (31) அறிவித்துள்ளது.

அதன்படி நேற்று நள்ளிரவுமுதல் இந்த விலை குறைப்பு...

02 பக்கம்

## யாழ். மாவட்ட செயலகத்துக்குள் நுழைந்து அதிரடிப் போராட்டம்

### நீதி அமைச்சரின் வருகைக்கு மக்கள் கடும் எதிர்ப்பு



(யாழ். செய்தியாளர்)

அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து...

02 பக்கம்


## சப்ரகமுவ பாடசாலைகளில் போதைப்பொருள் பாவனை

### பணம், உணவு வகைகளும் திருடப்படுவதாக பணிப்பாளர் பரபரப்புத் தகவல்

(ம. அகிலேஸ்)

சப்ரகமுவ மாகாணத்திலுள்ள ஒருசில பாடசாலைகளில் மாணவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளதாகவும் மேலும் சில மாணவர்கள் மற்றைய மாணவர்களின் பணம் மற்றும் உணவு உள்ளிட்ட பொருட்களை திருடுவதாகவும் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளதாக மாகாண...

02 பக்கம்



## தொழிலற்ற...

பெலவத்தை, இசுருபாயவுக்கு முன்னால் தொழிலற்ற பட்டதாரிகள் சிலரினால் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதன்போது, அமைச்சுக்கு சென்றுகொண்டிருந்த அமைச்சர் சுசில் பிரேமஜயந்த் ஆர்ப்பாட்டக்காரர்களை கண்டதும் நேரடியாக அவர்களை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். அதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதன் பின்னர் கலந்துரையாடலுக்கு வருமாறும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு அழைப்பு விடுத்திருந்ததுடன், இங்கு ஆர்ப்பாட்டம் செய்து மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்த வேண்டாம் என்று கடும் தொனியில் குறிப்பிட்டிருந்ததையும் அவதானிக்க கூடியதாக இருந்தது.

இதன்போது, ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் அமைச்சருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் விபரம் வருமாறு,

ஆர்ப்பாட்டக்காரர்கள் - எங்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு வேண்டும்.

அமைச்சர் - போராட்டத்தில் எத்தனை பேர் இருக்கிறீர்கள்? எத்தனை பேர் கோரிக்கைகளில் உறுதியாக இருக்கிறீர்கள்? அவர்கள் அனைவரும் என்னுடன் கலந்துரையாடலுக்கு வாருங்கள். ஏனையவர்கள் வீட்டுக்குச் செல்லலாம்.

இது பாடசாலை மாணவர்களின் கல்வித்திட்டங்களை முன்னெடுக்கும் இடம். இவ்விடத்தில் போராட்டம் செய்தால் அனைவரதும் செயற்பாடுகளுக்கும் பாதிப்பு ஏற்படும். ஆர்ப்பாட்டக்காரர்கள் - நாங்கள் உங்களை சந்திக்கவே வந்தோம்.

அமைச்சர் - ஆனால், நீங்கள் என்னை சந்திக்க நேரடியாக வரவில்லையே...

ஆர்ப்பாட்டக்காரர்கள்- உங்களை சந்திக்க நாங்கள் வந்தோம். உங்களை சந்திப்பதற்கான நேரத்தை ஒதுக்கித் தருவதாக தெரிவித்தார்கள். ஆனால், இதவரையில் எந்த அனுமதியும் கிடைக்கவில்லை. செயலாளர் இதுவரையில் எதுவும் அறிவிக்கவில்லை.

அமைச்சர் - அதனை செயலாளருடன் பார்த்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு எனக்கும் ஏதாவது சிக்கல் இருக்குமாக இருந்தால் வாருங்கள் கலந்துரையாடலாம். நீங்கள் அனைவரும் என்ன கற்றுள்ளீர்கள்?

ஆர்ப்பாட்டக்காரர்கள் - நாங்கள் அனைவரும் வெளிவாரி பட்டதாரிகள்.

அமைச்சர் - வாருங்கள் உள்ளே செல்லலாம். அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பிப்போம். பின்னர் பரீட்சை நடத்தப்படும். பரீட்சையில் அதிக புள்ளிகளை பெற்று அடுத்த கட்டங்களுக்கு செல்லமுடியும்.

ஆசிரியர் சேவை சட்டத்துக்கமைய 35 வயதுக்கு குறைவானவர்களே ஆசிரியர் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்படுவார்கள். கணித பாடத்திலும் புள்ளிகள் பெறவேண்டும். இதன் இரண்டையும் செய்ய வேண்டும் என்றால் அதற்கு எனக்கு கால அவகாசம் வேண்டும். நான் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொடுப்பேன் என்றார்.

## ஹிக்கடுவவில்...

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

2021 ஆம் ஆண்டு இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தபோதே அவர்கள் இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் படுகாயங்களுக்குள்ளான இருவர் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஹிக்கடுவ, களுபே பிரதேசத்தை சேர்ந்த பிரசன்ன மெண்டிஸ் என்றழைக்கப்படும் 47 வயதுடைய நபரொருவரும், இசுரு பிரசன்ன என்றழைக்கப்படும் 26 வயதுடைய நபரொருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துடன் கடந்த சில தினங்களில் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில், திட்டமிடப்பட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குழுக்களினால் 32 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அதற்கமைய, 37 பேர் உயிரிழந்துள்ளனர்.

## சப்ரகமுவ...

கல்விப் பணிப்பாளர் எஸ்.குருப்பு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அந்த மாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளினதும் அதிபர்களுக்கும் கடிதமொன்றை அவர் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

சப்ரகமுவ மாகாண பாடசாலைகளின் ஒருசில கல்வி அதிகாரிகள் பாடசாலை நேரங்களில் போதைப்பொருளை பயன்படுத்துகின்றனர்.

சில பாடசாலைகளின் ஆசிரியர்கள் பாடசாலை தினங்களில் விடுமுறைகளை அறிவித்துவிட்டு பிரத்தியேக வகுப்புகளை நடத்துவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதேவேளை பாடசாலை மாணவர்களிடையே முரண்பாடான சூழ்நிலைகள் காணப்படுவதாகவும், பாடசாலை கல்வி நடவடிக்கைகான நேர அட்டவணை ஒழுங்கற்ற முறையில் காணப்படுவதாகவும் தெரிவித்ததோடு, இது தொடர்பில் கூடிய கவனம் செலுத்துமாறு சப்ரகமுவ மாகாணதிலுள்ள அனைத்து பாடசாலை அதிபர் உட்பட நிர்வாககுழுவிற்கும் அறிவுறுத்தியுள்ளார்.

## யாழ்.மாவட்ட...

யாழ். மாவட்ட செயலகத்துக்குள் நுழைந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று (31) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாவட்ட செயலகத்துக்கு முன்னால் கொட்டும் மழைக்கு மத்தியிலும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையிலேயே செயலகத்துக்குள் நுழைந்தனர்.

இந்தியாவிலிருந்து திரும்பி வந்த இலங்கையர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதற்கான நடமாடும் சேவை நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் ஆரம்பித்தது.

இதன்போது நீதி மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கலந்துகொண்ட நிலையில் அவரது வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் வேண்டாம், சர்வதேச நீதி விசாரணையை மட்டுமே நாங்கள் கோருகிறோம், இரண்டு இலட்சம் லஞ்சம் வேண்டாம், நீதி அமைச்சரே வெளியேறு, விஜயதாச ராஜபக்ஷவே வெளியேறு என கோஷம் எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர். நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனும் குறித்த போராட்டத்தில் பங்கேற்றார்.

## அமுலுக்கு வந்தது...

சான்றுரைப்படுத்தினார்.

அரசியலமைப்புக்கான இருபத்திரெண்டாம் திருத்தச் சட்டமூலம் 2022 ஒகஸ்ட் 10ஆம் திகதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதன் பின்னர் இதற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், குறித்த உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைய நீதி அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

அரசியலமைப்புத் திருத்தச் சட்டமூலம் குறித்த விவாதங்கள் கடந்த ஒக்டோபர் 20 மற்றும் 21ஆம் திகதி ஆகிய இரு தினங்கள் நடைபெற்றன.

இரண்டாவது மதிப்பீட்டின் இறுதியில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் சட்டமூலத்துக்கு ஆதரவாக 179 வாக்குகளும், எதிராக ஒரு வாக்கும் அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து குழுநிலையில் திருத்தங்கள் உள்ளடக்கப்பட்ட பின்னர் மூன்றாவது மதிப்பீட்டுக்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் இதற்கு ஆதரவாக 174 வாக்குகளும் எதிராக ஒரு வாக்கும் அளிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய அரசியலமைப்புக்கான 22 ஆவது திருத்தச் சட்டமூலம், 21 ஆவது அரசியலமைப்புத் திருத்தமாக நேற்று முதல் (31) அமுலுக்கு வந்தது.


## பெயர் மாற்றம்

**127/3, சாய்ராம் வீதி, ஆலையடிவேம்பு. அக்கரைப்பற்றைச் சேர்ந்த தேசிய அடையாள அட்டை இலக்கம் 200364300520 கொண்ட சதானந்தன் கிதுர்சனா ஆகிய நான் 30.09.2022 முதல் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி எனது பெயரை சதானந்தன் சனா என மாற்றிக்கொண்டுள்ளேன். தற்போதும் அதே முகவரியான இல. 127/3, சாய்ராம் வீதி, ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்றை வசிப்பிடமாகவும் கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பமிடுவேன் எனவும் இத்தால் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகிறேன்.**


## வெளிநோயாளர்...

அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித்த அளுத்கே தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பான பரிந்துரைகளை இதற்கு முன்னரே அரசாங்கத்துக்கு முன்வைத்துள்ளதாகவும் ஆனால், அதுதொடர்பில் சுகாதார அமைச்சு உரிய கவனம் செலுத்தவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் விளக்கமளித்து நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மருத்துவமனைகள் ஏற்பட்டுள்ள மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான தட்டுப்பாடு மேலும் தீவிரமடைந்துள்ளது. தற்போது ஒருசில வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவைக் கூட முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வளவு காலமும் சிகிச்சை பிரிவுகளில் காணப்பட்ட மருந்து தட்டுப்பாடு தற்போது, வெளிநோயாளர் பிரிவுக்கு தேவைப்படும் அடிப்படை சிகிச்சைகள் கூட இல்லாமல் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது.

ஒருசில வைத்தியசாலைகளில் பெரசிட்டமோல், பிரிட்டன் போன்ற மருந்துகள் கூட இல்லாவொரு நெருக்கடி நிலைமை உருவாகியுள்ளது. கொழும்பை அண்மித்த வைத்தியசாலைகள் உள்ளிட்ட மேலும் சில வைத்தியசாலைகளின் செலைன் போன்ற மருந்துகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

அதேபோன்று, இரத்த பரிசோதனைக்கு பயன்படுத்தப்படும் எதிர்வினை மருந்துகளுக்கும் கடும் தட்டுப்பாடு நிலுவவதாக தெரிவிக்கப்படுகின்றது. அநுராதபுரம் போன்ற மருத்துவமனைகளில் கதிரியக்க செயற்பாடுகளுக்கு உள்வாங்கப்படுத்தப்பட்ட நோயாளர்கள் பெரும் சிக்கலுக்குள்ளாகியிருந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது.

ஈசிஜி பிரிசோதனை, ஸ்கேன் பரிசோதனைகளின் பிரதி எடுக்கும் செயற்பாடுகள் என்பனவும் பிரச்சினைக்குள்ளாகியுள்ளன. அரச வைத்தியசாலை கட்டமைப்புகளில் மருந்து தட்டுப்பாட்டுக்கு அப்பால், சிகிச்சைக்கான உபகரணங்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன.

இந்த நிலைமையை இதற்கு முன்னரும் நாங்கள் விவரித்தோம். அதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் பரிந்துரைகளை அமைச்சுக்கு முன்வைத்துள்ளோம்.

இருந்தபோதும் இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவில்லை. சுகாதார அமைச்சும் பொறுப்பின்றி செயற்படுவதுபோன்றே தெரிகின்றது.

கொழும்பு தேசிய வைத்தியசாலை உள்ளிட்ட சகல மருத்துவமனைகளிலும் இடம்பெறும் ஒரு சில பரிசோதனைகளுக்கு ஒரு சில வரையறைகள் விதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக தற்போதுள்ள வளங்களை முகாமைத்துவம் செய்யும் நடவடிக்கைகளின் காரணமாக வெளிநோயர் பிரிவில் மேற்கொள்ளப்படும் கதிரியக்க பரிசோதனை உள்ளிட்ட பல்வேறு பரிசோதனைகளுக்கு வரையறை விதிக்கப்பட்டுள்ளமையானது அந்த பிரிவை மேலும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது என்றார்.

## பாடசாலைக் கல்வி...

பொருளாதார நிலைமை காரணமாக ஆதிவாசி பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதில்லை என ஆதிவாசிகளின் தலைவி லிசினோனா தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் பட்டினியோடு இருக்கும் சிறுவர்கள் வீட்டிலும் பாடசாலையிலும் மயங்கி விழுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலையில் கூலி வேலையை இழப்பதால், பழங்குடியின சமூகம் வீடற்றவர்களாக மாறியுள்ளதாகவும், சிலர் சவர்க்காரம் கூட இல்லாமல் குளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்று ஆதிவாசிகள் பழங்காலத்தைப் போலவே கிழங்கு தோண்டி மரங்களின் இலைகளை உண்பதற்காக மீண்டும் காட்டுக்குச் சென்றுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

## பேக்கரி...

அமுல்படுத்தப்பட்டதாக குறித்த சங்கம் மேலும் அறிவித்துள்ளது.

இந்நிலையில், 450 கிராம் பாண் (ஒரு இறாத்தல்) மற்றும் பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலைகள் 10 ரூபாவால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விவசாயம் உள்ளிட்ட...

பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நேற்று முன்தினம் (30) பிற்பகல் நடைபெற்ற இலங்கை தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் 32ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றியபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

போட்டிமிகு தேயிலைச் சந்தையில் நிலைத்திருக்க வேண்டுமாயின் தேயிலை தொழிற்துறையை நவீனமயப்படுத்த வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார். ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட பொருளாதாரத்தில் இது மிகவும் இன்றியமையாதது எனக்கூறிய ஜனாதிபதி, ஆரம்பத்தில் தேயிலை தொழிற்துறையில் கிடைத்த வெற்றியை மீண்டும் உறுதி செய்ய வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் உரையாற்றுகையில்,

"தேயிலை உற்பத்தித்துறையில் கடந்து வந்த இக்கட்டான நிலைமைகள் தொடர்பில் அதன் தலைவர் கூறியிருந்தார். டைட்டானிக் கப்பல் பனிப் பாறையில் முட்டியதன் பின்னரே நான் அதனை பொறுப்பேற்றுள்ளேன். நான் எங்கிருந்து தொடங்க வேண்டும் என்பதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியும். பொருளாதார நெருக்கடியை சந்தித்திருப்பதாக பிரகடனப்படுத்தியுள்ளோம். மக்களுக்குப் போதுமான அளவு உண்பதற்கு உணவு இருக்கிறது என்பதையும் முதலில் உறுதி செய்தாக வேண்டும்.

இந்த நெருக்கடியுடன் எமது பொருளாதாரம் தடைப்பட்டுள்ளது. பணவீக்கம், நிதி நெருக்கடி ஆகிய அனைத்தும் எமது பொருளாதாரத்திற்கு முட்டுக்கட்டையை ஏற்படுத்தியுள்ளன. அதிலிருந்து மீள வேண்டும்.

முதலாவதாக நாம் எம்மிடமுள்ள வெளிநாட்டுக் கையிருப்பை தக்க வைத்துக் கொள்வதுடன், இறக்குமதியை மட்டுப்படுத்த வேண்டும். அதன் ஊடாக, எம்மால் எரிபொருள், உரம் மற்றும் மருந்து ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

வருமானமில்லாமல் போனதால் எமக்கு கட்டணங்களைச் செலுத்துவதற்கும் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் முடியாமல் போயுள்ளது. எனினும், 1.7 மில்லியன் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் வழங்கவும் கடன்களை மீளச் செலுத்தவும் வேண்டியுள்ளது என்பதை நாம் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும்.

நாம் பொருளாதார நெருக்கடியில் இருப்பதாக அறிவித்துள்ளோம். முதலாவதாக நாம் வங்குரோத்தடைந்துள்ளோம் எனும் நிலையை மாற்றுவதற்கு அவசியமான நகர்வுகளை முன்னெடுத்துள்ளோம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக நாம் சர்வதேச நாணய நிதியத்திடம் கலந்துரையாட வேண்டும். ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு அமைப்பும் இதைச் செய்யுமாறு எம்மிடம் வலியுறுத்தியுள்ளன.கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ள வேண்டியுள்ளது. சாதாரண மக்கள் வாழ்வதற்கு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே, முதலாவதாக நாம் தற்போதுள்ள நெருக்கடியை மீளக்கட்டமைக்க வேண்டும். எனவே, நாம் எமது கடன் வழங்குனர்களுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும். அதற்காகவே நான் முதலில் பாரிஸ் கிளப்பிற்குச் சென்றேன். அதில் உள்ளவர்கள் அனைவரும் மேற்குல நாடுகளையும், ஜப்பானையும் சேர்ந்தவர்கள்.

ஆனால், நாம் தனித்துவமானதொரு நிலையிலேயே இருக்கின்றோம். எமக்கு கடன் வழங்க முன்வந்துள்ள மூன்று நாடுகளுள் ஒன்று மாத்திரமே பாரிஸ் கிளப்பிற்கு சொந்தமானது. மற்றைய இரண்டும் அதில் அங்கத்துவம் வகிக்காத நாடுகள் ஆகும். அவை இந்தியா மற்றும் சீனாவாகும். நான் ஜப்பானுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதோடு, இந்தியா மற்றும் சீனாவுடன் தற்போது பேச்சுகளை ஆரம்பித்துள்ளேன். இருதரப்பு விடயங்களை ஆராயும் வகையில் நாம் பொதுவானதொரு மேடையில் இது தொடர்பில் கலந்துரையாடி வருகிறோம். இதுவே நாம் முன்னெடுக்க வேண்டிய செயன்முறையாகும்.

பெரும்போகம் மூலம் அடுத்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் அதிக விளைச்சல் கிடைக்குமாக இருந்தால் நாட்டின் பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த அது பெரும் உதவியாக இருக்கும்.

சுற்றுலாத் துறையை மேம்படுத்த வேண்டும். அடுத்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் அதிகளவான சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்டு செயற்பட்டால் இதனை அடைய முடியும். வெளிநாட்டு நிதி கையிருப்பை இப்போது அதிகரிக்க வழியில்லை. மற்ற எல்லா வழிகளையும் இழந்துவிட்டதால், நமது தொழில் முயற்சிகளை டொலரில் விற்பதே வெளிநாட்டு மூலதனத்தை திரட்ட ஒரே வழியாக இருக்கும்.

விவசாயத்தை நவீனப்படுத்தும் வேலைத்திட்டத்தில் இறங்கியுள்ளோம். இதன் ஊடாக தேயிலைக் கைத்தொழிலுக்கு பெரும் மதிப்பு ஏற்படும்.

தேயிலைக் கைத்தொழிலை மறுசீரமைத்து உங்களின் ஆதரவுடன் முன்னோக்கி செல்லும் வேலைத்திட்டத்தை நாங்கள் நடைமுறைப் படுத்த வேண்டும். இதை எவ்வாறு நிறைவேற்றுவது என்பது தெளிவாகத் தெரியவில்லை என்றாலும், பனிப்பாறையில் மோதிய டைட்டானிக் கப்பலை காப்பாற்ற என்னால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் செய்து வருகிறேன்'' என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## நாட்டின் நெருக்கடி

மீண்டும் கட்டியெழுப்பும் விடயத்தில் தமக்கும் பாரிய பொறுப்பு இருப்பதாக அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் நேற்று முன்தினம் கொழும்பு, டார்லி வீதியிலுள்ள அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. அந்த கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதற்கு முன்னர் இடம்பெற்ற கலந்துரையாடல்களுக்கு எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால், அதுதொடர்பில் இதன்போது நான் வினவவில்லை. கடந்த காலங்களில் எனக்கு அழைப்பு விடுக்காததாலேயே நான் கலந்துரையாடல்களில் பங்கேற்கவில்லை. இம்முறை கலந்துரையாடலுக்குஎனக்குஅழைப்பு விடுக்கப்பட்டதால் நான் பங்குப்பற்றியிருந்தேன்.

கட்சிக்குள் இரு நிலைப்பாடுகள் இருக்கின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்துச் சென்றவர்களே ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்துள்ளார்கள் என்பது குறித்தே நாங்கள் தொடர்ந்து பேசிவந்தோம். ஆனால், பொதுஜன பெரமுனவிலுள்ள பெரும் எண்ணிக்கையிலான எம்.பிக்கள் மீண்டும் சுத்திரக் கட்சியுடன் இணைவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்கள். இதனூடாக, சுதந்திரக் கட்சியிலிருக்கும் இருவேறுபட்ட நிலைப்பாடுகளையும் ஒன்று சேர்த்துக்கொள்ளக் கூடியதாக இருக்குமென்று நான் நம்புகிறேன்.

நீண்ட நாட்களுக்கு முன்னர் கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்களை விட, அருகில் இருந்து பிரிந்து சென்றவர்கள் தவறானவர்கள் என்று கூற முடியாது. அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்ப வேண்டும். நாட்டை கட்டியெழுப்பும் வேலைதிட்டத்துக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமைத்துவத்தை வழங்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்.

பொதுவான அரசியல் நிலைமையை உருவாக்குவதற்காக, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சர்வக்கட்சி அரசாங்கமொன்றை அமைக்க வேண்டும் என்று கோரவில்லை. நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொள்வதற்காகவே சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைக்க வேண்டும் என்று யோசனை முன்வைத்திருந்தோம்.

மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை பெற்றுக்கொடுப்பதற்காக விமர்சன அரசியலுக்கு அப்பால் சென்று, பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இன்னும் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கிறோம்.

மீண்டும் பின்னால் திரும்பி அரசியல் வரலாற்றை பார்த்துவிட்டு, நாடு இன்று எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு காரணம் யார் என்று வினவுவார்களானால் அதில் சுதந்திரக் கட்சியின் பெயரும் உள்ளடக்கப்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதனை யாரும் மறந்துவிடவும் கூடாது. கடந்த வரலாற்றை பார்க்கும்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணி அரசாங்கமே அதிக காலம் ஆட்சி செய்துள்ளது.

நாட்டின் தற்போதைய நிலைமைக்கு காரணம் ராஜபக்ஷக்கள் என்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவது போன்று, ராஜபக்ஷக்களை பாதுகாத்த மீண்டும் அவர்களை பதவிகளுக்கு நியமித்த அவர்களுடன் அரசாங்கத்தை அமைத்து ஜனாதிபதி பதவியை வகித்த எங்கள் அனைவருக்கும் இதில் பங்கு இருக்கிறது.

நேரத்துக்கு ஏற்ப இந்த பிரச்சினையிலிருந்து எம்மால் தப்பித்துச் செல்ல முடியாது. கட்சி, நிற, குல, சமய பேதமின்றி நாட்டை வீழ்ச்சியிலிருந்து மீட்டெடுப்பதற்கான பலத்தை பெற்றுக்கொடுப்பது எமது அனைவரதும் பொறுப்பாகவுள்ளது.

கட்சிக்குள் இருவேறுபட்ட நிலைப்பாடுகள் இருக்கின்றன என்பது தெளிவாக அனைவருக்கும் தெரியும். அரசாங்கத்தில் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டவர்கள், தாம் இன்னும் சுதந்திரக் கட்சியில் இருப்பதாக அவர்கள் இன்றும் ஒப்புக்கொள்கிறார்கள். அவர்களின் இன்னும் சுதந்திர கட்சியிலிருந்து வேறு எந்த கட்சியிலும் உறுப்புரிமையை ஏற்கவில்லை.

சுதந்திரக் கட்சியின் நிலைமைப்பாட்டை பெற்றுக்கொண்டே 2015ஆம் ஆண்டு மைத்ரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக தெரிவுசெய்தோம். ஜனாதிபதி பதவியை ஏற்றதன் பின்னர் கட்சியின் தலைமைத்துவத்தை அவர் ஏற்கவில்லை. எனவே, கட்சியை விட்டு வெளியேறவோ, வேறு கட்சிக்கு சென்று தேர்தலில் போட்டியிடவோ, வேறு கட்சிகளின் உறுப்புரிமையை பெறவோ எம்முடன் இருக்கும் எவரும் தயாராக இல்லை. அதேபோன்று மக்களுக்கு ஏற்புடைய வேலைத்திட்டங்களை இந்த அரசாங்கம் முன்னெடுக்குமாக இருந்தால் அதற்கு உதவ நாங்கள் தயாராக இருக்கிறோம் என்றார்.

## யாழ்.மாவட்ட...

வெளியிட்டுள்ளதுடன் தலைமைத்துவம் பொறுப்புடனும் விட்டுக்கொடுப்புடனும் செயற்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளதாக அறிய முடிந்தது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமையகத் திறப்பு விழாவுக்கு ஜீவன் தொண்டமான் அழைக்கப்பட்டமை தொடர்பில் பிரதித் தலைவர்களுக்கோ அல்லது அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ அறிவிக்கப்படவில்லையென குற்றஞ்சுமத்தப் பட்டுள்ளது.

திறப்புவிழாவுக்கு ஜீவன் தொண்டமான் வருகை தந்ததன் பின்னர் மண்டபத்தில் கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. இந்த விடயத்தை எதிர்பார்த்திராத கூட்டணியின் பிரதித் தலைவர் வேலுசாமி இராதாகிருஷ்ணன், தனிப்பட்ட தேவைகள் உள்ளதாகக் குறிப்பிட்டு மண்டபத்திலிருந்து உடனடியாக வெளியேறிச் சென்றார். அவர் வெளியேறிச் செல்லும்போது மணபத்தில் சலசலப்பு ஏற்பட்டதுடன், அதனைக் கட்டுப்படுத்துவதற்கு கடும் பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில், மனஸ்தாபத்தின் காரணமாகவே வெளியேறியதாகவும் ஜீவன் தொண்டமானின் வருகை குறித்து முன்கூட்டியே அறிவிக்கப்படவில்லையென்றும் வே. இராதாகிருஷ்ணன் எம்.பி. 'தமிழன்' நாளிதழுக்கு நேற்று தெரிவித்தார்.

"மனஸ்தாபத்தின் காரணமாகவே நிகழ்வில் இடைநடுவில் வந்துவிட்டேன். நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் இந்த நிகழ்வில் கலந்துகொண்டதில் எனக்கு எந்த பிரச்சினையும் இல்லை.

ஜீவன் தொண்டமானும் இந்நிகழ்வில் கலந்துகொள்வார் என்று எங்களுக்கு முன்கூட்டியே அறிவிக்கவில்லை. கூட்டணியில் இருப்பவர்களுக்கு அறிவிக்காமல் வேறு கட்சி சார்ந்தவர்களை அழைப்பது தவறு என்பதாலேயே இதனை சுட்டிக்காட்டுகிறேன். எங்களுக்கு அறிவிக்காமல் அவருக்கு அழைப்பு விடுத்தது மனஸ்தாபத்தை ஏற்படுத்தியுள்ளது" என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைமைத்துவங்கள் தன்னிச்சையான முறையிலும் ஏதேச்சதிகாரமாகவும் செயற்பட்டால் கூட்டணி குறித்து மக்கள் மத்தியில் அதிருப்தி அலை உருவாகி, இறுதியில் அது ஆபத்திலேயே முடியும். எனவே, விட்டுக்கொடுப்புகளுடன் ஜனநாயக வழியில் பயணிப்பதற்கு தலைமைகள் முன்வர வேண்டும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியை பிரதிநிதித்துவப்படுத்தும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலு குமார் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று (31) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"அடக்கி ஆளும் தனிக்காட்டு ராஜா அரசியலை மலையக மக்கள் நிராகரிக்கின்றனர். கொள்கை ரீதியிலான அரசியலையே அவர்கள் விரும்புகின்றனர். அதன் காரணமாகவே உரிய கொள்கைகளுடன் உதயமான தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு மக்கள் அமோக ஆதரவு வழங்கினர். எனவே, மக்களின் மனநிலை என்ன, அவர்கள் எதிர்பார்ப்பது எத்தகைய அரசியல் என்பதை புரிந்துகொண்டு - தவறுகளை திருத்திக்கொண்டு பயணித்தால் மாத்திரமே மக்கள் மத்தியில் நீடித்து நிலைக்க முடியும். எனவே, மக்களுக்கான அரசியல் பயணத்தை மேற்கொள்வதற்கான வழிகாட்டலையே தலைமைத்துவங்கள் வழங்க வேண்டும். ஜனநாயக பண்புகளுக்கு இடமளிக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் பெரும் பின்னடைவு ஏற்படும்.

தென்னிலங்கையில் இருந்த இரு பிரதான கட்சிகள்தான் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன. இவ்விரு கட்சிகளின் நிலையும் இன்று கவலைக்கிடமாக உள்ளது. காரணம் தலைமைத்துவங்களின் தன்னிச்சையான முடிவும், மக்களின் மனநிலை அறியாத செயற்பாடுகளுமே.

எனவே, மலையக மக்கள் விரும்பும் - ஏற்கும் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கும் அவ்வாறானதொரு நிலை ஏற்பட இடமளித்து விடக்கூடாது எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், முற்போக்குக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான தொழிலாளர் தேசிய சங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். உதயகுமாரும் இந்த விடயத்தில் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார். தலைமைத்துவத்தின் தன்னிச்சையான போக்கு குறித்து அவர் தனது அதிருப்தியை தனது கட்சியின் தலைவர் பழனி திகாம்பரத்திடம் தெரிவித்துள்ளதாக அறியமுடிந்தது.

# மலையகத் தமிழ் மக்களை எவ்வாறு சமூகத்துடன் இணைப்பது என்பதைக் கண்டறிய ஜனாதிபதியால் குழுவொன்று நியமனம்







மலையகத் தமிழ் மக்களை இலங்கை சமூகத்துடன் மேலும் எவ்வாறு இணைப்பது என்பது தொடர்பில் ஆராய குழுவொன்று நியமிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மலையகத்தை பூர்வீகமாக கொண்ட தமிழ் மக்களில் சிலர் இலங்கை சமூகத்துடன் வெற்றிகரமாக இணைந்துள்ளதாகவும், வேறு சிலர் அங்கு தோல்வியடைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவர்களுக்கு ஆதரவாக செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வேண்டுகோளுக்கு இணங்க புதுச்சேரி யூனியன் பிரதேசம் மற்றும் இந்திய மக்களால் வழங்கப்பட்ட மருந்துப் பொருட்களை பொறுப்பேற்கும் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் (30) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இணைந்துகொண்ட போதே இவ்வாறு தெரிவித்தார்.

23 வருடங்களுக்கு முன்னர் மறைந்த சௌமியமூர்த்தி தொண்டமானின் நினைவாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் இந்த மருந்துப் பொருட்களை ஜனாதிபதியிடம் உத்தியோகபூர்வமாக கையளித்ததுடன், ஜனாதிபதி, சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவிடம் குறித்த மருந்துப் பொருட்களை கையளித்தார்.

பெருந்தோட்ட வைத்தியசாலைகள் சுகாதார அமைச்சுக்குக் கீழ் கொண்டுவரும் அதேவேளை, தோட்டப் பாடசாலைகளின் அபிவிருத்தியை உறுதி செய்வதற்கு தாம் செயற்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய மக்களைப் போன்று மலையகத்தை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் மக்களும் தமது சொந்த வீட்டில் வசிக்கும் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே அவர்களுக்கு காணிகளை வழங்குவதற்கும் மற்றும் அவற்றில் வீடுகளை அமைக்கும் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கும் அரசாங்கத்தின் ஆதரவு வழங்கப்படுவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

கல்வியை முடித்த பின்னர் இளைஞர்கள் தோட்டங்களை விட்டு வெளியேறும் போக்கு காணப்படுவதாகவும், அதன் காரணமாக ஆபத்தில் உள்ள பெருந்தோட்டப் பொருளாதாரத்தை மீட்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பெருந்தோட்ட இளைஞர்கள் மற்றும் நாட்டின் அனைத்து இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்புகளை உருவாக்க அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவித்தார்.

மலையக மக்களை வறுமையில் இருந்து விடுவித்து அவர்களை பொருளாதார ரீதியில் மேம்படுத்துவதற்காக, அங்கு வாழும் மக்களின் எதிர்காலம் மற்றும் பெருந்தோட்டப் பொருளாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் மேலும் கவனம் செலுத்த வேண்டுமெனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஜே.ஆர்.ஜயவர்தன ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தின் பிரகாரம், மலையகத்தில் வாழும் தமிழ் வம்சாவளி மக்களுக்கு, நாட்டின் ஏனைய பிரதேசங்களில் வாழும் மக்கள் பெறும் சலுகைகளை வழங்க அரசாங்கம் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த வேலைத்திட்டத்துடன் இணைந்துகொள்ளுமாறு மலையகத் தமிழ்த் தலைவர்களைக் கேட்டுக்கொண்டார்.

மறைந்த தொண்டமான், மலையக மக்களுக்காக ஆற்றிய சேவைகளைப் பாராட்டிய ஜனாதிபதி, சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் பின்னர், தங்கியிருந்த இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அனைவருக்கும் அகிம்சை வழியில் குடியுரிமை வழங்கியதன் காரணமாக 20ஆம் நூற்றாண்டில் இலங்கையின் தலைசிறந்த தலைவர்களில் ஒருவராக அவர் திகழ்ந்ததாக அறிவித்தார். சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் நாட்டை விட்டு வெளியேறியிருக்க வேண்டியதானாலும் இலங்கையில் தங்கியிருக்க தீர்மானித்த பிரஜைகளும் குடியுரிமை பெற்றதாக ஜனாதிபதி இங்கு நினைவு கூர்ந்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் செந்தில் தொண்டமான் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## கருத்து கந்தசாமி



யாழ்ப்பாணத்தில சூரன்போர் நிகழ்ச்சி நடத்தும்போது ஏற்பட்ட சண்டையில் இரண்டு பேரை வாளால வெட்டியிருக்கிறதா செய்தியொன்று வாசிச்சன்...

யாழ்ப்பாணத்திலே நோர்மலாகவே இப்படியான சூரன்போர் அன்றாடம் நடக்குது எண்டபடியால கந்தன் இந்த சூரன்மாற முதலில கட்டுப்படுத்தவேணும் எண்டு மனசுக்குள் நினைச்சுக்கொண்டன்..

சூரசம்ஹாரம் உள்ளூர் சூரன்களுக்குமாக இருக்கவேணும் நல்லைப்பெருமானே..!

## மீன் ஏற்றச்சென்ற வாகனம் கத்திமுனையில் கடத்தல்



வென்னப்புவ - உல்ஹிட்டியாவ பகுதியில் கூரிய ஆயுதங்களுடன் வந்த மூவர் 90 இலட்சம் ரூபா பெறுமதியான கூலர் வாகனத்தை கடத்திச் சென்றுள்ளதாக வென்னப்புவ தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

உல்ஹிட்டியாவ கடற்கரையில் மீன் கொள்வனவு செய்ய வந்த கூலர் வாகனமொன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோது கடத்தப்பட்டதாக வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

தான் உல்ஹிட்டியாவ கடற்கரைக்கு மீன் கொள்வனவு செய்யச் சென்றதாகவும், மீன்பிடி படகுகள் வரத் தாமதமானதாகவும், ஆயுதம் ஏந்திய மூவர் வந்து, கூலர் வாகனத்தின் கதவைத் திறந்து, கத்தியால் தாக்கி, வாகனத்திலிருந்து வெளியே இழுத்துப் போட்டுவிட்டு, வாகனத்தை கடத்திச் சென்றதாகவும் சாரதி கூறினார்.

## கொரிய அனர்த்தத்தில் உயிரிழந்த இளைஞரின் சடலத்தை நாட்டிற்குக் கொண்டுவர நடவடிக்கை

தென் கொரியாவின் சியோல் நகரில் இடம்பெற்ற ஹெலோவின் நிகழ்வின்போது ஏற்பட்ட சன நெரிசலில் உயிரிழந்த இலங்கைப் பிரஜையின் சடலத்தை நாட்டிற்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த இளைஞரின் சடலத்தை நாட்டிற்கு கொண்டுவர வேண்டியது அவசியமென அவரின் உறவினர்கள் தெரிவித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தில் மேலும் இலங்கையர்கள் பாதிக்கப்பட்டுள்ளனரா என்பதைக் கண்டறிய சியோலில் உள்ள பொலிஸார் மற்றும் வைத்தியசாலைகளுக்கு அதிகாரிகளை அனுப்பியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சு மற்றும் தென் கொரியாவிற்கான இலங்கைத் தூதரகம் ஊடாக மேலதிக தகவல்கள் திரட்டப்படுவதாக வெளிவிவகார அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



இதனிடையே, சம்பவத்தில் உயிரி ழந்த இளைஞர் தொழில் நிமித்தம் தென் கொரியாவுக்கு சென்றவர் அல்லவென தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சின் செயலாளர் விமலவீர தெரிவித்துள்ளார்.

அவர் கல்வி நடவடிக்கைகளுக்காக சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

சியோலில் இடம்பெற்ற அனர்த்தத்தில் கண்டி உடதலவின்ன பகுதியைச் சேர்ந்த 27 வயதான முனவ்வர் மொஹமட் ஜினாத் எனும் இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சியோல் நகரில் இடம்பெற்ற அனர்த்தத்தில் சிக்கி இதுவரை 154 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நீதி அமைச்சின் நடமாடும் சேவை யாழ்ப்பாணத்தில்



நீதி மற்றும் சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் ஒழுங்கமைப்பில் நடமாடும் சேவை நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரையில் குறித்த நடமாடும் சேவை நடைபெற்றது.

இதனை நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் நீதி அமைச்சர், நீதி அமைச்சரின் செயலாளர் வசந்த பெரேரா, நீதி அமைச்சின் மேலதிக செயலாளர் சமுர்த்தியசிங்க, யாழ். மாவட்ட செயலர் க.மகேசன், மேலதிக செயலளர் ம.பிரதீபன், காணி மேலதிக செயலாளர் செ.முரளிதரன், பிரதேச செயலாளர்கள் மற்றும் ஏனைய அமைச்சுகளின் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

குறித்த நடமாடும் சேவையில் பிறப்பு மற்றும் திருமண சான்றிதழ் பெற்றுக் கொள்ளல், பிரஜாவுரிமை சான்றிதழ் பெற்றுக் கொள்ளல், இந்தியாவிலிருந்து திரும்பி வந்த இலங்கையர்களுக்கான காணித்தேவை மற்றும் காணி உரிமை பிரச்சினைகள் தொடர்பானவை, வன்முறையால் பாதிக்கப்பட்ட சொத்து மற்றும் உயிரிழப்பு காயத்திற்கான நட்டஈடு பெற்றுக் கொள்ளல், தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்ளல், இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினூடாக ஏற்கனவே அனுப்பப்பட்ட கோவைகளை பூரணப்படுத்தல் போன்றவை தொடர்பான சேவைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த நடமாடும் சேவையில் நீதி மற்றும் சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, பதிவாளர் நாயகம் திணைக்களம், ஆட்பதிவு திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், இழப்பீட்டுக்கான அலுவலகம், காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம், மாகாண காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம் ஆகிய அமைச்சுகள் மற்றும் திணைக்களங்கள் பங்குபற்றி இருந்தன.

இதேவேளை, குறித்த நடமாடும் சேவை இன்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி திறன் விருத்தி மத்திய நிலைய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியாவை சேர்ந்தவர்களும் கிளிநொச்சியில் இன்று நடைபெறவுள்ள நடமாடும் சேவையில் சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


# மலையக மக்களின் புலம்பெயர்வு ஆராயப்படவேண்டிய விடயமாகும்!

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் கண்டியில் தெரிவிப்பு





















மலையக மக்களுடைய புலம்பெயர்வு, அதனால் ஏற்பட்ட இழப்பீடுகள் சம்பந்தமான விடயத்தில் பிரித்தானிய அரசுக்கு எதிராக எங்கேயாவது ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்படல் வேண்டும். அதற்கான இழப்பீடுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இது கட்டாயம் செய்யப்பட வேண்டிய ஒரு விடயம் என்று கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கண்டி மக்கள் கலை இலக்கியத்தின் ஏற்பாட்டில் கவிஞரும் முற்போக்கு எழுத்தாளருமான ரா. நித்தியானந்தன் எழுதிய "இரவைத் தேடும் நிழல்" எனும் கவிதைத் தொகுதியும் "19ஆம் நூற்றாண்டின் இந்திய தமிழரின் இலங்கை நோக்கிய அசைவியக்கமும் தள்ள இழுவை காரணிகள் செயற்பாடும்" எனும் ஆய்வு நூல் வெளியீட்டு விழா கண்டி விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நூலின் முதல் பிரதியை அகில இலங்கை வை.எம்.எம். ஏ. பேரவையின் சஹீட் எம்.ரிஸ்மி பெற்றுக் கொண்டார். ஹக்கீம் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மலையக மக்களுடைய புலம்பெயர்வு, அதனால் ஏற்பட்ட இழப்பீடுகள் சம்பந்தமான விடயத்தில் பிரித்தானிய அரசுக்கு எதிராக எங்கேயாவது ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்படல் வேண்டும். அதற்கான இழப்பீடுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இது கட்டாயம் செய்யப்பட வேண்டிய ஒரு விடயம். பிரித்தானிய ஆட்சியாளர்கள் தங்களுடைய காலனித்துவ நாடுகளிலுள்ள மக்களுக்கு ஏதோ உதவி செய்வது போன்ற நினைத்துக் கொண்டு முழுக்க முழுக்க நாடுகளைச் சூறையாடினர். மக்களுடைய எதிர்கால வாழ்வையெல்லாம் சீரழித்துத்தான் அவர்கள் ஒரு நிலையை எட்டியிருக்கிறார்கள்.

எனவே, இந்த இழப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கு இது சம்பந்தமான ஒரு ஆய்வைச் செய்து அதில் ஈடுபட வேண்டிய தேவை அவசியம் இருக்கிறது. தற்போதைய மலையகம் சம்பந்தமான போராட்டமான விடயத்தில் நிறைய அரசியல்வாதிகள் பல விடயங்கள் பற்றிப் பேசுகிறார்கள். ஆனால், எதுவும் சாத்தியப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்த அரசாங்கம் வந்தபோது மலையகத் தமிழர்களுக்கு தனியான பல்கலைக்கழகம் அமைய வேண்டும் என்ற ஒரு போராட்டம் நடந்தது. அது சாத்தியமானதாகத் தென்பட வில்லை. அது சாத்தியமானாலும் அல்லது இல்லாமல் விட்டாலும் குறைந்த பட்சம் ஏழு பேர்ச் காணி விவகாரம் இன்னும் ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்படாத வகையில் உள்ளது. கண்டி மாவட்ட செயலகத்தில் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையை ஊக்கவிப்பதற்கான ஒரு கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது.

இதில் பிரதமர், அமைச்சர்மார் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் வீட்டுச் தோட்டச் செய்கைக்காக அரச காணிகளையும் மற்றும் அரச பெருந்தோட்டக் காணிகளையும் மக்களுக்கு 2 ஏக்கர் வீதம் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று மிக ஆர்வமாக முண்டியடித்துக் கொண்டு பேசப்பட்டது. ஆனால், உண்மையிலேயே இதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டியவர்கள் மலையகத் தமிழர்களே. குறைந்தது 7 பேர்ச்சஸ் காணியைக் கொடுப்பதில் காலத்தை இழுத்தடிப்புச் செய்கின்ற அரசாங்கம் இந்த 2 ஏக்கர் காணி வழங்குதலுக்கு முன்னுரிமை கொடுத்து, முக்கியமாக இந்த நாட்டில் மக்கள் எதிர்நோக்குகின்ற உணவுப் பற்றாக்குறைக்கான உச்ச பயனை அடையலாம். இப்படியான விவகாரங்களில் அழுத்தம், கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும்.

இறுதியாக பேராசிரியர் துரை மனோகரனுக்கு நான் கௌரவம் செய்யக் கிடைத்தமை எனக்கு கிடைத்த மிகப் பெரிய கௌரவங்களில் ஒன்று. மலையகத்தில் நாங்கள் பெரிய சொத்துகளை இழந்து வருகிறோம். அண்மையில் பேராசிரியர் சந்திரசேகரம், தெளிவத்தை ஜோசப் ஆகியோரை இழந்துள்ளோம். ஆனால், நாங்கள் உயிர் வாழுகின்றபோது அவர்களுக்கு முழுமையான கௌரவத்தைக் கொடுத்து குறைந்த பட்சம் அந்த பெருமையை நாங்கள் அடைகின்றோம் என்ற திருப்தி இருக்கிறது. பேராதனை பல்கலைக்கழக நூலகர் மகேஸ்வரன் மலையக மக்கள் பெருமைப்படக் கூடி ஒரு விளையாட்டு வீரர். ஹொக்கி விளையாட்டில் தேசிய மட்டத்தில் உயர்ந்த விளையாட்டு வீரர். ஹொக்கி விளையாட்டு பயிற்றுவிப்பாளர் சபையில் உயர் பதவியில் இருக்கிறார் என்பது மலையகத்திற்கு கிடைத்த ஓர் அங்கீகாரம்.

வவுனியா பல்கலைக்கழகத்தை தரம் உயர்த்துவதற்கு நான் பங்களிப்புச் செய்துள்ளேன். உயர் கல்வி அமைச்சராக ஒரு வருடம் கடமையாற்றுகின்ற காலத்தில் எப்படியோ வவுனியா பல்கலைக்கழகத்தை தரம் உயர்த்துவதற்கான அந்தஸ்தை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற விவகாரத்தில் மும்முரமாக நின்று அதை வர்த்தமானியில் பிரசுரம் செய்து அதைத் தரம் உயர்த்துவற்கு பங்களிப்பு செய்தேன் என்ற மனத்திருப்தியும் சந்தோஷமும் இருக்கிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தலையுரையை தேச கீர்த்தி முத்தையாப் பிள்ளை ஸ்ரீகாந்தனும் கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவர் கலாபூஷணம் இரா. அ.இராமன் வரவேற்புரையினையும் மாத்தளை இஸ்லாமிய தமிழ் இலக்கியப் பேரவையின் தலைவர் எம். எம். பீர்முஹம்மது வாழ்த்துரையையும் நூல்கள் பற்றிய மதிப்புரையை வவுனியா பல்கலைக்கழக விஞ்ஞானபீட விரிவுரையாளர் த.தமனேந்திரன் மற்றும் கண்டி புனித திரித்துவக் கல்லூரி ஆசிரியை சர்மிளாதேவி துரைசிங்கம் ஆகியோரும் நிகழ்த்தினர்.

எழுத்தாளர்களான எஸ்.சேனாதிராஜா, எம்.எச்.சித்தீக் மற்றும் முன்னாள் ஆசிரியர் ஆலோசகர் ஆர்.பார்த்தீபன் ஆகியோர் கருத்துரை நிகழ்த்தினர். நன்றியுரையை சங்கத்தின் செயலாளர் இக்பால் அலி வழங்கினார். நிகழ்ச்சியினை எஸ்.எஸ்.இராஜேந்திரா தொகுத்து வழங்கினார்.

பேராசிரியர் துரை மனோகரனின் 75 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு அவர் மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தினால் கௌரவிக்கப்பட்டு தமிழருவி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். பேராதனை பல்கலைக்கழக பிரதான நூலகர் ஆர். மகேஸ்வரன் 60 ஆவது மணிவிழாவை முன்னிட்டு மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தினால் நூலகவேந்தன் என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.


## வெற்றி நிச்சயம்

"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால் 100% வெற்றி நிச்சயம்." நடக்காத காரியங்களையும் நடத்தி வைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப் பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன், முன்னேற்றத்தடை, எதிலும் தோல்வி, தீராத நோய், போதைவஸ்துப்பாவனை, வழக்கு, விற்கப்படாத வீடு/காணி, வாகனம் விற்க, வெளிநாடு செல்ல, கொடுத்த பணம் திரும்பிவர, கணவன்-மனைவி பிரச்சினை, விவாகரத்தை தடுக்க, காதல், மனங்கவர்ந்தவரை வசமாக்கிக்கொள்ள, பிரிந்தவர் ஒன்றுசேர, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 48 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத்தீர்வு. இது சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர்-1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், மனோதத்துவ நிபுணர், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து கௌரவ கலாநிதி ஸ்ரீமத் சுவாமிஜி -0710192687

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2022, நவம்பர் 01ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை**

# பாராட்டப்படவேண்டிய மலையகத் தலைவர்களின் செயற்பாடுகள்

ஹட்டன், டிக்கோயா, என்பீல்ட், ஒட்டரி பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைமையகக் கட்டடத் தொகுதியான தாயகம் நேற்று முன்தினம் (30.10.2022) ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தலைமையில் இடம்பெற்ற இந்தத் திறப்பு விழாவில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். விசேட அதிதிகளாக இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே, கண்டி இந்திய உதவி உயர்ஸ்தானிகர் திருமதி ஆதிரா ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிறப்பு அதிகளாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவர்களான பழனி திகாம்பரம் எம்.பி, வி. இராதாகிருஷ்ணன் எம்.பி, தமிழ் முற்போக்கு கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான வேலுகுமார், உதயகுமார் மற்றும் பொதுச்செயலாளர் சந்திரா சாப்டர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மலையக மக்கள் நலன் கருதி தமிழ் முற்போக்கு கூட்டணி முன்னெடுக்கின்ற அரசியல் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையிலும், மக்களுக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள், கல்வி நடவடிக்கைகள் மற்றும் வினைத்திறனான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காகவும் இந்தத் தலைமைக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தக் கட்டடத் திறப்பு நிகழ்வில் நடந்த மிக முக்கிய அம்சம், மலையகத்தில் கீரியும் பாம்புமாக இருந்த மலையக அரசியல் தலைமைகள் ஒன்றுபட்டு ஒரே மேடையில் தோன்றியமை என்றால் மிகையில்லை.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் காலத்தில் மலையகத்தில் தொழிற்சங்கங்கள் அரசியல் செய்தாலும், அமரர் சந்திரசேகரன் காலத்திற்குப் பின்னர் தொழிற்சங்கங்கள் அரசியல் வேலைகளில் ஈடுபட்டன. இதனால் மலையக சமூகம் பல பிரிவுகளாக பிரிந்துபோனது. பல சந்தர்ப்பங்களில் அரசியல் கட்சிகள் மலையகத்தில் தத்தமது செல்வாக்குள்ள நகரங்களில் சண்டித்தனங்களை காட்டியிருந்தன. தொழிலாளர் தினமான மே தின கூட்டங்களை யார் எந்த நகரில் நடத்துவது, யார் செய்வதை நிறுத்துவது என்று போட்டியிடும் அளவுக்கு நிலைமை இருந்தது.

ஆறுமுகம் தொண்டமானும், பழனி திகாம்பரமும் பரம எதிரிகளாகத் திகழ்ந்தனர். இருவரும் ஒரே அரசில் அமைச்சர்களாக இருக்கக்கூடாது என்றளவுக்கு அவர்களுக்குள் கருத்து முரண்பாடு இருந்தது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை வந்தபோது மட்டும் ஆறுமுகம் தொண்டமானும் திகாம்பரமும் அந்த மேடையில் ஒன்றாகத் தோன்றினர். அப்படி திகழ்ந்த அந்த அரசியல் எதிரித்தனம் நீங்கி நேற்று முன்தினம் திகாம்பரமும் ஜீவன் தொண்டமானும் ஒரே மேடையில் தோன்றியதை நிச்சயம் பாராட்டியாக வேண்டும்.

வடக்கு - கிழக்கிலும் சரி, தெற்கிலும் சரி அரசியல் தலைவர்கள் தங்களுக்குள் வெட்டிக்குத்திக் கொண்டு முரண்பாடுகளுடன் அரசியல் செய்யும்போது வளர்ந்துவரும் இளம் அரசியல் தலைவர்கள் இவ்வாறு பக்குவமாக செயற்பட முன்வந்துள்ளமை முன்னுதாரணமாகக் கொள்ளப்படவேண்டியதே.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர், தமிழ் முற்போக்கு கூட்டணியின் மேடையில் ஏறியமை குறித்து இந்த இரண்டு கட்சிகளுக்குள்ளும் விமர்சனங்கள் இருக்கலாம். இதனால் அரசியல் எதிர்காலம் பாதிக்கப்பட்டுவிட்டது என்ற அச்சம் அவர்களுக்குள் இருக்கலாம். ஆனால், இந்த நிகழ்வுகளால் இரண்டு கட்சிகளினதும் வாக்குவங்கியில் இது சரிவைத் தந்துவிடாது என்பதுதான் யதார்த்தம். தனது அரசியல் எதிரியை தனது நிகழ்வுக்கு அழைத்ததன் மூலம் தமிழ் முற்போக்கு கூட்டணி தனது முற்போக்குச் சிந்தனையை, பன்முகத்தன்மையை வெளிக்காட்டியிருக்கிறது. அதேபோல் அரசியல் எதிரியின் நிகழ்வு மேடையில் அமர்ந்து தனது பக்குவத்தை, வளர்ந்துவரும் அரசியல்வாதிக்கு இருக்கவேண்டிய பொறுமையை வெளிக்காட்டியிருக்கிறார் ஜீவன் தொண்டமான்.

தேவைப்படின் எவரும் இந்த ஒற்றுமை குறித்து அரசியல் கண்ணோட்டத்தில் விமர்சிக்கலாம். இந்த ஒற்றுமை அடுத்த தேர்தல்வரை என்று கூட சொல்லலாம். ஆனால், மக்கள் பக்கம் நின்று பார்க்கும்போது இந்த புரிந்துணர்வு காலத்தின் கட்டாயம். மக்களின் எதிர்காலம் முக்கியமல்ல, அரசியல் எதிர்காலமே முக்கியம் என்று பார்க்கும் எவருக்கும் இது கேலிக்கூத்தாகவே இருக்கும். ஆனாலும், பொறுப்புவாய்ந்த ஊடகம் என்ற ரீதியில் மலையக அரசியல் தலைவர்களின் இந்த ஆரோக்கிய அரசியல் நகர்வை எம்மால் வரவேற்காமல் இருக்க முடியாது. கூட்டணியின் கட்சித் தலைமையகத்தை தடபுடலாகத் திறந்து, அதனை அரசியலாக்கி, டாம்பீகமாகப் படம் காட்டாமல் அரசியல் அனுகூலங்களை இழந்து, அதனை ஒற்றுமையின் களமாக ஆக்கிய முற்போக்கு கூட்டணியின் தலைமைக்கும் அதன் முக்கிய உறுப்பினர்களுக்கும் சபாஷ் இடவேண்டும். மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களை, சிறுதோட்ட உரிமையாளர்களாக்குவதற்கான வேலைத்திட்டத்தின்போது தமிழ் முற்போக்கு கூட்டணியும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் இணைந்து செயற்படும். மலையகத்தில் இனி வன்முறை அரசியலுக்கு இடமில்லை. புதிய அரசியல் கலாச்சாரம் பிறந்துள்ளது" என்கிறார் திகாம்பரம்.

"தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எனக்கு சிறந்த வழிகாட்டியாக உள்ளார். திகாம்பரம் எனது மூத்த சகோதரன் போன்றவர்" என்கிறார் ஜீவன் தொண்டமான்.

"மலையகத் தமிழர்களின் எழுச்சி, வளர்ச்சியில் இரட்டை குழல் துப்பாக்கியாகச் செயற்படுவோம் என இ.தொ.காவுக்கு அழைப்பு விடுத்திருந்தேன். அது தற்போது சாத்தியப்பட்டுள்ளது" - என்கிறார் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன்.

இவையெல்லாம் வெற்றுவார்த்தைகளாக , அரசியல் பேச்சாக இருக்குமானால் எதிர்காலத்தில் இதுதொடர்பில் மக்கள் தீர்மானங்கள் எடுப்பார்கள். ஆனால், இன்றைய நிலையில், மேற்படி புரிதல் நிலை மிக முக்கியத்துவமான ஒன்றாக பார்க்கப்படவேண்டும். எல்லாவற்றையும் அரசியல் கண்ணாடியிட்டுப் பார்ப்பதால் அரசியல்வாதிகளின் சொல்லிலும் செயலிலும் நம்பிக்கையில்லாமல் இருப்பது இயல்பென்றாலும், சில விடயங்களை வாழ்த்தி வரவேற்கும் தார்மீக கடமை மக்களுக்கும் ஊடகங்களுக்கும் இருத்தல் வேண்டும். அந்த வகையில், தமிழ் முற்போக்கு கூட்டணியின் முற்போக்கான செயற்பாடுகளையும் ஜீவன் தொண்டமானின் அரசியல் நாகரிகத்தையும் முழுமனதுடன் வரவேற்கிறான் தமிழன். இது தொடரவேண்டும்.

## இன்றைய நாளில்...

- ★ 1604 – ஷேக்ஸ்பியரின் 'ஒத்தெல்லோ' நாடகம் முதல் தடவையாக லண்டனில் அரங்கேறியது.
- ★ 1611 – ஷேக்ஸ்பியரின் 'த டெம்பெஸ்ட்' நாடகம் முதல் தடவையாக லண்டனில் அரங்கேறியது.
- ★ 1876 – நியூசிலாந்தின் மாகாண சபைகள் கலைக்கப்பட்டன.
- ★ 1904 – கொழும்பிலிருந்தான இலங்கையின் வடக்குத் தொடருந்துப் பாதை அநுராதபுரம் வரை அமைக்கப்பட்டு சேவை ஆரம்பமானது.
- ★ 1928 – துருக்கிய மொழி சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டது. அரபு எழுத்துமுறை இலத்தீன் எழுத்துகளாக மாற்றப்பட்டன.
- ★ 1952 – அமெரிக்கா ஐவி மைக் அணுகுண்டு சோதனையை வெற்றிகரமாக நடத்தியது.
- ★ 1973 – மைசூர் மாநிலம் கர்நாடகா எனப் பெயர் மாற்றப்பட்டது.
- 1984 – இந்திராகாந்தி படுகொலையை அடுத்து, இந்தியாவில் சீக்கியர்களுக்கு எதிரான வன்முறைகள் வெடித்தன.
- ★ 1999 – 'ஓயாத அலைகள் மூன்று' இராணுவ நடவடிக்கையின் முதலாவது கட்டம் புலிகளால் தொடங்கப்பட்டது.
- ★ 2006 – பெங்களூர் நகரின் பெயர் பெங்களூரு என மாற்றப்பட்டது.

# நீதியின் நேசக்கரம்!

ஆட்சியாளர்கள் செய்யத் தயங்குவதையும், தவறுவதையும் நீதிமன்றங்கள் தலையிட்டு விடைகாண முற்படுவதை வரம்பு மீறல் என்று விமர்சிக்க முடியவில்லை.

நிர்வாகமோ, நீதித்துறையோ, நாடாளுமன்றமோ எதுவாக இருந்தாலும் மக்களின் நன்மைக்காக செயல்படுபவை. ஒருவர் தவறும்போது மற்றவர் அந்தத் தவறை திருத்துவதன் மூலம் நன்மை ஏற்படுமானால், அது வரவேற்புக்குரியதே.

கடந்த ஒக்டோபர் 11ஆம் தேதி சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை வழங்கியிருக்கும் தீர்ப்பு மிகச் சரியான ஆறுதலான ஒன்று. எஸ்.அபிராமி என்பவர் தொடுத்த வழக்கில் உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன், இந்துக்களான இலங்கைத் தமிழ் அகதிகளுக்கும் 2019 குடியுரிமை திருத்தச் சட்டம் செல்லும் என்று அளித்த அந்தத் தீர்ப்பை வரவேற்க ஒட்டுமொத்த தமிழகமும் கடமைப்பட்டிருக்கிறது.

இலங்கையில் காணப்படும் பிரச்சினையை தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையேயான பிரச்சினையாக வடிவமைத்தது, இலங்கையின் வடகிழக்கு மாகாண தமிழர்களின் நலனைப் பாதித்தது. உண்மையில் பார்க்கப்போனால், அடிப்படைப் பிரச்சினை மொழி ரீதியானது அல்ல. மத ரீதியிலானது.

பெரும்பான்மை சிங்கள - பௌத்தர்களுக்கும், தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட வடகிழக்கு மாகாண இந்துக்களுக்கும், கிழக்குப் பகுதியில் வாழும் தமிழ் பேசும் இஸ்லாமியர்களுக்கும் இடையேயான பிரச்சினை அது. பெரும்பான்மையினரான பௌத்த - சிங்களவர்கள், சிறுபான்மையினரான இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் சம உரிமை வழங்க மறுத்ததாலும் மத ரீதியிலான இனவெறித் தாக்குதலை முன்னெடுத்ததாலும் உருவானதுதான் இலங்கையின் பிரச்சினை என்பது கூர்ந்து சிந்தித்தால் விளங்கும்.

இன்னும் சொல்லப்போனால், பலாலியில் இந்து புரோகிதர் ஒருவர் சிங்கள - பௌத்தர்களால் தீக்கிரை ஆக்கப்பட்டதைத் தொடர்ந்துதான் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் ஆயுதம் ஏந்த முற்பட்டார் என்பது வரலாற்று உண்மை.

குடியுரிமை திருத்தச் சட்டம் 2019இல் கொண்டுவரப்பட்டபோது அதில் காணப்பட்ட மிகப் பெரிய குறைபாடு 'மதச் சிறுபான்மையினர்' என்கிற வார்த்தை சேர்க்கப்படாததுதான். பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் உள்ளிட்ட அண்டை நாடுகளிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட இந்துக்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள், சீக்கியர்கள், அகமதியாக்கள், பார்ஸிக்கள் ஆகியோருக்கு குடியுரிமை வழங்குவது என்பதுதான் அந்தச் சட்டத்தின் நோக்கம்.

அதன் மூலம் இந்தியாவில் வாழும் இஸ்லாமியர்களின் குடியுரிமைக்கு எந்தவித பாதிப்பும் இல்லை என்பது உண்மை. அதே நேரத்தில், குடியுரிமை திருத்தச் சட்ட மசோதாவில், 'முஸ்லிம்கள் அல்லாத' என்கிற வார்த்தைக்குப் பதிலாக மதச்சிறுபான்மையினர் என்கிற வார்த்தை சேர்க்கப்பட்டிருந்தால் பிரச்சினையே எழுந்திருக்காது.

மேலும், இந்தியாவின் அண்டை நாடான இலங்கையிலிருந்து அகதிகளாக இந்தியாவில் தஞ்சமடைந்து நீண்டகாலமாகத் தங்கியிருக்கும் தமிழர்கள் குடியுரிமை திருத்தச் சட்டத்தில் இணைக்கப்படாமை குறித்து அப்போதே கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு இலங்கை தன்னை மதச்சார்பற்ற நாடாக அறிவித்துக் கொண்டிருப்பது காரணம் காட்டப்பட்டது. இன (மத) கலவரத்தால் பாதிக்கப்பட்டு இலங்கையின் மதச் சிறுபான்மையினரான தமிழ் பேசும் இந்துக்கள் விரட்டியடிக்கப்பட்டு இந்தியாவில் தஞ்சம் அடைந்ததைக் கருத்தில் கொள்ளாதது, குடியுரிமை திருத்தச் சட்டத்தின் குறைபாடு எனலாம்.

அபிராமி என்பவரின் பெற்றோர் இலங்கை வாழ் தமிழ் இந்துக்கள். இலங்கை குடியுரிமை பெற்றவர்கள். இலங்கையில் கலவரம் ஏற்பட்டபோது, அங்கிருந்து அகதிகளாக இந்தியாவில் தஞ்சம் புகுந்த அவர்களிடம் கடவுச்சீட்டு உள்ளிட்ட எந்தவித பயண ஆவணங்களும் இருக்கவில்லை.

1993இல் அகதிகளாக வந்த பெற்றோருக்கு மகளாகப் பிறந்தவர் அபிராமி. இந்தியாவில் வசித்து வருகிறார். அவர் இந்தியாவில் பிறந்ததால் இலங்கையின் குடியுரிமை பெற்றவரல்ல. இந்தியாவைத் தனது தாய்நாடாக ஏற்றுக்கொண்டு வாழ்பவர். அவர் தனக்கு இந்தியக் குடியுரிமை கோரி முன்னெடுத்த முயற்சிகள் அனைத்துமே நிராகரிக்கப்பட்ட நிலையில், நீதிமன்றத்தை நாடினார்.

"இலங்கை அகதிகள் மரபணு ரீதியாக இந்த மண்ணைச் சேர்ந்த நமது மொழி பேசும் கலாசாரப் பின்னணி கொண்டவர்கள். அவர்களை கண்காணிப்பு வலயத்தில் கட்டுப்படுத்தி நீண்ட காலத்திற்கு தாய்நாடில்லாத மக்களாக வைத்திருப்பது இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 21 வழங்கும் உரிமைக்கு எதிரானது. குடியுரிமைத் திருத்தச் சட்ட மசோதா இந்தியாவின் அகதிகள் கொள்கையில் வரவேற்புக்குரிய மாற்றத்தை ஏற்படுத்தியது உண்மை. ஆனால், அதில் இலங்கை சேர்க்கப்படாதது தவறு" என்று நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

1947 பிரிவினையின்போது கிழக்கு, மேற்கு பாகிஸ்தானிலிருந்தும் 1959இல் திபெத்திலிருந்தும் வங்கதேச உள்நாட்டுப் போரைத் தொடர்ந்து 1971இலும் 1983க்குப் பிறகு இலங்கையிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான அகதிகள் இந்தியாவில் தஞ்சமடைந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் குடியுரிமை வழங்குவது என்பது இந்தியர்களுக்கான வாய்ப்புகளைப் பாதிக்கும் என்பது மட்டுமல்லாமல், நிதிச்சுமையையும் ஏற்படுத்தும் என்பதை அன்று பிரதமராக இருந்த இந்திரா காந்தி சுட்டிக்காட்டி எச்சரித்ததை நினைவில் கொள்ளவேண்டும். அதனால்தான் இந்தியாவில் தேசிய அகதிகள் சட்டம் நிறைவேற்றப்படவில்லை.

நீதிபதி சுவாமிநாதன் அறிவுறுத்தியிருப்பதுபோல், இந்திய வம்சாவளித் தமிழ் அகதிகளுக்கு குடியுரிமை வழங்க மத்திய அரசு முன்வர வேண்டும்.

**நன்றி - தினமணி**

# மலையக இளந்தலைவர்களுக்கொரு சபாஷ்!



தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா என்ற வாசக அடியைப் பல தடவைகள் வாசித்து, அறிந்து, கேட்டு, பேச்சுகளிலும் எழுத்துகளிலும் பயன்படுத்தியும் இருக்கிறேன்.

அதனை நேற்று முன்தினம் உணர்வுபூர்வமாக உணர்ந்தேன். நம் மலையக உறவுகளின் ஒரு நிகழ்வின் சங்கமத்தில் அதனை அவதானித்தேன்.

மலையகத் தமிழ் கட்சிகளின், அதுவும் அவற்றின் தலைவர்களினது உறவுநிலை குறித்து பத்திரிகையாளனாக எனக்கு மிகுந்த பரிச்சயம் உண்டு. அவர்களுக்குள் நடக்கும் மோதல்கள், அதிகார அட்டகாசங்கள், ஒருவரையொருவர் மிதிக்கும் அரசியல் அடாவடித்தனங்கள் எல்லாம் இப்போது பழைய கதைகள். அவை மலையேறி விட்டன. ஒன்றுபட்ட ஒரு தேசிய இனமாக எழுச்சி பெறுவதற்கு எது அவசியமோ, அதை அவர்கள் - குறிப்பாக அவர்களின் தலைவர்கள் - சரியாகவும் கனகச்சிதமாகவும் அடையாளம் கண்டுவிட்டனர். அதைச் சரியாகக் கடைப்பிடிக்கவும் அவர்கள் தயாராகி விட்டனர். ஹட்டன் நிகழ்வில் மலையகத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களின் வெளிப்படையான பேச்சு அதனை எடுத்தியம்பி, நிரூபித்து நிற்கின்றது.

ஒன்றிணைய முடியாத மனோ கணேசன், திகாம்பரம், இராதாகிருஷ்ணன் ஆகியோர் ஒன்றிணைவு அவசியம் என்பதை உணர்ந்து அதில் எவ்வளவு தூரம் உறுதியாக நின்றார்கள், அதற்காக எவ்வளவு தூரம் சகித்துக் கொண்டார்கள், விட்டுக் கொடுத்தார்கள் என்பவற்றை எழுதுவதாயின் ஒரு கட்டுரைத் தொடரே வரையலாம். பல தரப்புகளுடனும் தொடர்பு வைத்துள்ள ஊடகவியலாளன் என்ற முறையில் இந்தத் தலைவர்களையும், அவர்களின் போக்குகளையும், பண்புகளையும் நான் அறிவேன். அந்தத் தமிழ் முற்போக்கு முன்னணியின் கூட்டு இத்தனை ஆண்டுகள் தாக்குப்பிடித்து, ஒரு கூட்டணி அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டு, நின்று பிடிக்கும் வலுவான நிலைக்கு வரும் என்று ஆரம்பத்தில் நான் நம்பவில்லை. ஆனால், அதை சாத்தியமாக்கி காட்டினார்கள் மூன்று தலைவர்களும். அதற்காக அவர்கள் எவ்வளவு சகித்துக் கொண்டார்கள், பொறுமை காத்தார்கள், ஒருவருக்கொருவர் மதிப்பளித்து விட்டுக் கொடுத்து நடந்து கொண்டார்கள் என்பது அவர்களிடமிருந்து ஏனைய அரசியல் பிரமுகர்கள் படித்துக் கொள்ள வேண்டிய பாடம்.

அந்த ஐக்கியச் சிறப்பை, அடுத்த கட்டத்துக்கு நகர்த்தி, தங்கள் மக்கள் இந்நாட்டின் பலமுள்ள ஒரு தேசிய இனமாக எழுச்சி பெறும் யதார்த்தத்தை அவர்கள் இப்போது உறுதிப்படுத்தியிருக்கிறார்கள்.

தொண்டமான்கள், கணேசன்கள், திகாம்பரம் போன்ற தரப்புகளுக்கு இடையில் சந்ததி சந்ததியாக இருந்த வைரித்தனத்தை நான் அறிவேன். அதையெல்லாம் மூட்டைகட்டி ஒதுக்கிவிட்டு, ஒரு தேசிய இனமாக மேலெழ எது தேவையோ, அதை மட்டும் அவர்களின் புதிய தலைமுறைத் தலைவர்கள் தங்கள் பாதையாகத் தேர்ந்தெடுத்திருக்கின்றார்கள்.

இதனால் இலங்கை அரசியலில் பேரினவாதிகள் கூட புறமொதுக்க முடியாது பெரும் வலுவான சக்தியாக மலையகத் தமிழினம் திரண்டெழும் அருமையான வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

மனோ கணேசன் கூறுவது போன்று அவரின் தமிழ் முற்போக்கு கூட்டணியும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் இரட்டைக் குழல் துப்பாக்கியானால், சிங்களப் பேரினவாதமே அதற்கு பின்னர் மலையகத் தமிழ் சமூகத்திடம் இலகுவாக வாலாட்ட முடியாது என்பது நிச்சயம்.

தொண்டமானின் பரம்பரையில் வந்த இள இரத்தம், "மனோ கணேசன் எனது வழிகாட்டி, திகாம்பரம் எனது அண்ணன்" என்ற உரிமையோடு பகிரங்க அரசியலுக்கு வந்திருக்கிறது என்றால், அந்த அரசியல் கலாசார வளர்ப்புக்காக பூட்டன் சௌமியமூர்த்தி தொண்டமானும், அவர் பேரன் ஆறுமுகம் தொண்டமானும் மெச்சப்பட வேண்டியவர்கள். அதற்காக அவர்களைப் பாராட்ட வேண்டும்.

முந்திய தலைமுறையில் எதிரெதிர் நிலையைப் பற்றி நின்றார்கள் சௌமியமூர்த்தி தொண்டமானும் வி.பி.கணேசனும்.

ஆனால், பெரிய தொண்டமானின் கொள்ளுப்பேரன் ஜீவன் தொண்டமானும், வி.பி.கணேசனின் மகன் மனோ கணேசனும் இன்று வழிகாட்டி - வழி தொடர்பவர் என்ற யதார்த்தத்தைப் புரிந்து அதற்கு இணங்கியிருக்கின்றார்கள். இதை இவ்வளவு உணர்ந்து, மெச்சி, நான் எழுதுவதற்குக் காரணமுண்டு.

சிறுபான்மையினர் என்ற முறையில் மலையகத் தமிழர்கள் எதிர்கொண்ட அடக்குமுறையைத்தான் பேரினவாதத்திலிருந்து வடக்கு, கிழக்குத் தமிழர்களாகிய நாமும் எதிர்கொண்டோம்.

அடக்குமுறையை எதிர்த்த போராட்டத்தால் பேரிழப்புகளைச் சந்தித்த பின்னரும் கூட, நமது தலைவர்களுக்கு, அந்த மலையகத் தமிழ் தலைமைகள் புரிந்துகொண்ட அரசியல் தலைமைத்துவப் பண்புகள் வரவே இல்லை என்ற ஆதங்கம்தான் இதை எழுத வைத்தது.

அரசியலில் பரமவைரிகளாக இருந்த தந்தை செல்வாவும் ஜீ.ஜீ.பொன்னம்பலமும் கூட, இன நலன் ஒன்றையே முன்னிறுத்தி, எதிரித்தனத்தைக் கைவிட்டு, ஒன்றிணைந்தார்கள். ஆனால், அவர்களின் சந்ததிகள் இன்று என்ன செய்கின்றன?

மலையகத்தில், மூத்த சந்ததியின் வைரித்தனத்தை ஒதுக்கி வைத்து விட்டு, தம் இன நலனுக்காக புதிய சந்ததி ஒன்றிணைகிறது. தமது இனத்தைத் தலைநிமிர வைக்க எது தேவையோ, அதை ஐக்கியப்பட்டு செய்ய விழைகின்றது.

நமது தமிழர் தாயகத்தில் மூத்த தலைமுறை, காலத்தின் கட்டாயம் கருதி ஒன்றிணைத்து வைத்த இணைப்பை, அடுத்த தலைமுறைகள் சிதறடித்து, தமிழர் ஒற்றுமையை நாறடிக்கின்றன.

நமது அரசியல் தலைவர்கள் மலையகத் தமிழ்த் தலைமைகளிடம் கொஞ்சம் கேட்டுப் படித்தால் நல்லது.

அவர்களின் (வடக்கு, கிழக்கு தமிழர்களின்) திமிர்த்தனம் அதற்கு இடம் கொடுக்காது.

மலையகத்தின் இயல்பான பணிவு அவர்களின் தலைமைகளைத் துணிவு கொள்ள வைத்திருக்கின்றது.

வடக்கு-கிழக்கில் தலைவர்களின் ஒற்றுமையற்ற துணிவு, அவர்களின் தலைமைகளை பணிந்துபோன நிலைக்குத் தள்ளிவிட்டது. இதுதான் உண்மை.

**என்.வித்தியாதரன்**
**ஆசிரியர் - காலைக்கதிர்**



# மறக்க முடியா சேவைகளை ஆற்றிய நவாஸ் ஏ. கபூர்



இலங்கை வரலாற்றில் பாரிய சமூக, சமயப் பணிகளை முன்னெடுத்த குடும்பத்தின் மற்றுமொரு தலைமுறை சார்ந்த நவாஸ் ஏ. கபூரின் மறைவு ஆழ்ந்த வருத்தத்தை ஏற்படுத்துகிறது. கொழும்பு மத்திய தேர்தல் தொகுதியின் முதலாவது நாடாளுமன்ற உறுப்பினரான மர்ஹூம் பழீல் ஏ. கபூரின் மகனான இவர், இலங்கையில் பெரும் நன்கொடைகளை வழங்கிய வர்த்தகரான மர்ஹூம் என்.டி.எச்.அப்துல் கபூரின் பேரனுமாவார். புகழ்பெற்ற கபூர் கட்டடம், கபூர் என்ட் சன்ஸ் வர்த்தக நிறுவனங்கள் இக்குடும்பத்தவர்களையே சாரும். நேர்மையாக, சமூக மார்க்கப் பற்றுடனும், சமூக விருப்பார்வத்துடனும் வாழ்ந்த இவர், தனது 96ஆவது வயதில் கடந்த 28ஆம் திகதி வபாத்தானார்.

மஹரகம கபூரியா அரபுக்கல்லூரியை தமது சொந்த நிதிப் பங்களிப்பில் ஸ்தாபித்த இக்குடும்பத்தின் நான்காம் தலைமுறையினர் அதன் இருப்பை கேள்விக்குட்படுத்தும் சமகாலத்தில், இவரின் மறைவு ஆழ்ந்த சிந்தனைக்குரியது. சமூக கவலையுடனும் மார்க்கம் பற்றிய பிரக்ஞையுடனும் வாழ்ந்த ஒருவர். அவர் மறைந்தாலும் அவருக்காக செய்கின்ற கைமாறு, அவரது பணிகளை ஞாபகப்படுத்துவதும், அவருடைய சேவைகளை எடுத்துச் சொல்வதும், எதிர்கால சந்ததியினருக்கு அதனைச் சரியாகச் சொல்வதும்தான் மிகப் பொருத்தமானதென நினைக்கின்றேன்.

சமூக நலனுக்காக மிகவும் தூரநோக்கோடு 1967இல் அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் இளைஞர் பிரிவு தோற்றம் பெற்றது. பின்னர் அது அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி என்ற பெயரில் இயங்கியது.

1978ஆம் ஆண்டு எனது தந்தையான மர்ஹூம் எம்.ஏ.பாக்கீர் மாக்காரின் அழைப்பின்பேரில் முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தில் இணைந்த அவர், 1980இல் நாடளாவிய ரீதியில் பங்குபற்றிய பிரதிநிதிகளைக்கொண்டு கொழும்பு ரன்முத்து ஹோட்டலில் நடைபெற்ற பிரம்மாண்டமான கூட்டத்தின்போது பாக்கீர் மாக்கார் புதிய அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் தேசிய தலைவராகவும், அல்ஹாஜ் ஏ.எம்.நசீர் பொதுச் செயலாளராகவும், அல்ஹாஜ் நவாஸ் ஏ. கபூர் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டார்கள். தலைவரோடு அவர்கள் நாட்டின் பல பாகங்களுக்கும் பயணம் மேற்கொண்டு அதன் வளர்ச்சிக்கும் சமுதாய மேம்பாட்டிற்கும் அயராது உழைத்தார். அல்ஹாஜ் நவாஸ் ஏ. கபூர் ஸ்தாபகப் பொருளாளராக கடமையாற்றினாலும் அவரது பங்களிப்பு பரந்த ஒன்றாக அமைந்திருந்தது.

குருந்தலாவ சென். தோமஸ் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஆரம்ப தொகுதியின் தலைவராக செயற்பட்டுள்ளார். கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி ஆளுநர் சபைத் தலைவராக இருந்துள்ளார். மருதானை பள்ளி பரிபாலன சபையின் தலைவராக மரணிக்கும் வரை செயற்பட்டார்.

இவர்களுடைய நிர்வாக காலத்தில் மஹரகம கபூரிய அரபுக்கல்லூரி நிர்வாகம், ஆசிரியர் குழாம் மற்றும் மாணவர்கள் இடையே சுமூகமான தொடர்புகளைப் பேணியவராவார். வெள்ளிக்கிழமைகளில் ஜும்மா தின தொழுகைகளுக்காக கபூரியா சென்று மாணவர்களின் குத்பா உரைகளை செவிமடுத்து திருப்திப்படுவார்.

அலவிய்யா ஸக்கியா குழுவின் முகாமையாளராகவும், வை.எம்.எம்.ஏ. அமைப்பின் தலைவராகவும், அகில இலங்கை ஹஜ் குழுவின் தலைவராகவும், டீ.பி.ஜாயா ஞாபகார்த்த நிதியத்தின் தலைவராகவும், அகில இலங்கை மாணிக்கக்கல் மற்றும் ஆபரண சங்கத்தின் தேசிய தலைவராகவும், இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவராகவும், இலங்கை மேசைக்கோற் பந்தாட்ட சங்கத்தின் தலைவராகவும், மூர் விளையாட்டுக் கழகத்தின் தலைவராகவும் என பல்வேறு மட்டங்களில் பல்பக்க சமூக சேவை பரப்பில் தன்னலம் பாராமல் செயற்பட்டுள்ளார். கோட்டைப் பகுதியில் வணிக வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் அரச தொழிலாளர்களின் நலன் கருதி செத்தம் வீதி பள்ளிவாசலை இன்றுள்ள அளவில் விசாலமாக்கியதில் பெரும் பங்கு இவருக்குண்டு. கடும் சுகயீனமுற்று நடப்பதற்கு முடியாத கட்டம் வரும்வரை ஐநேரத் தொழுகைக்காக கொழும்பு செத்தம் வீதி பள்ளிவாசலுக்கே சென்றார்.

மஹரகம கபூரியா வளாகத்தை அண்டிய பொது விளையாட்டரங்கம், இரத்மலானை கட்புல செவிப் புலனற்றோர் நிலையம் என்பன இவரது நன்கொடைகளே.

எனது தந்தையார் பழைய நாடாளுமன்ற கட்டடத் தொகுதியிலும், சபாநாயகரின் வாசஸ்தலமான மும்தாஜ் மஹாலிலும் இடம்பெற்ற முஸ்லிம் விவகாரம் சம்பந்தப்பட்ட சகல கூட்டங்களிலும் அவரின் பங்கேற்பை நான் சட்டக்கல்லூரி மாணவனாக இருக்கும்போது அவதானித்தமை இன்றும் நினைவில் நிழலாடுகிறது.

மர்ஹூம்களான என்.டி.எச்.அப்துல் கபூர், பழீல் ஏ கபூர் ஆகியோரின் உன்னத சமூகநல மேம்பாட்டு கரிசனை நவாஸ் ஏ. கபூரிடமும் குடிகொண்டிருந்தமை அவரின் பரோபகார தன்மையிலிருந்து புலப்படுகிறது. இக்குடும்பத்தினர் இந்நாட்டு முஸ்லிம் சமூகத்திற்கு ஆற்றிய மகத்தான பணிகளை மனதில் கொண்டு அவர்கள் மீதான இரக்கத்தின் வெளிப்பாடாக எனது தந்தையார் அவர்களை அடிக்கடி நினைவூட்டுவதும் எனது நினைவில் நிழலாடுகிறது.

மர்ஹூம் பழீல் ஏ. கபூரின் மறைவையொட்டி நாடாளுமன்றத்தில் அவர் மீதான அனுதாபப் பிரேரணை நிறைவேற்றப்பட்டபோது முன்னாள் ஜனாதிபதி மறைந்த ரணசிங்க பிரேமதாச ஒரு வரலாற்று இரகசியத்தை முதன்முதலாக வெளிப்படுத்தியமை எனது நினைவுக்கு வருகிறது.

“ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தா காணியை கொள்வனவு செய்வதற்கு பழீல் ஏ. கபூர் கூடிய நிதிப்பங்களிப்பை வழங்கிய ஒருவர்'' என அவர் குறிப்பிட்டார். இந்த விடயத்தை வெளிப்படுத்துவதற்கு “பழீல் ஏ. கபூர் ஒருபோதும் விரும்பாத, அதை வெளிப்படுத்தாத உன்னத நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார்” என்பதை தொடர்ந்தும் தனது அனுதாபப் பிரேரணை உரையில் பிரேமதாச குறிப்பிட்டார். இந்த அனுதாபப் பிரேரணையைத் தொடர்ந்து அப்போதைய சபாநாயகராக பணியாற்றிய எனது தந்தையாரின் குறிப்புகளுடனையே ஹன்சார்ட் பதிவுகளுக்காக அனுப்பப்பட்டது.

வலது கையால் கொடுப்பது இடது கைக்கு தெரியாமல் இருக்கட்டும் என்ற கோட்பாட்டை நிதர்சனமாக்கிய உதாரணபுருஷர் என்றால் அது மிகையாகாது. டி.எஸ்.சேனாநாயக்க, டட்லி சேனாநாயக்க மற்றும் ஜே.ஆர்.ஜயவர்தன போன்ற தலைவர்களின் நன்மதிப்பிற்கும் அன்பிற்கும் பாத்திரமாக வாழ்ந்த ஒரு மனிதராவார்.

எனது இந்த நினைவு முற்குறிப்பை இவ்வாறு நிறைவு செய்கிறேன். ஒருவரின் மரணத்தின் பிற்பாடு அவர் தொடர்பான நலவுகளை பசுமாறு இஸ்லாம் எமக்கு கற்பித்த கற்பிதங்களின் பிரகாரம் அவர் சார்ந்த நலவுகளையே இங்கு பதிவிட்டேன். நலவுகளை ஏற்று குறைகளை மன்னித்து மேலான சுவனபதியை வழங்க தூய மனங்கொண்டு பிரார்த்திக்கிறேன்.



**இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எம்.பி.**

# நீதி இல்லாத நாட்டில் அதற்காக அலுவலகம் எதற்கு? காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம்





(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து நேற்று திங்கட்கிழமை காலை 10.45 மணியளவில் மன்னாரிலுள்ள காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் முன் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் இடம்பெற்றது.

குறித்த போராட்டத்தில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார், மன்னார் பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன், மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் தலைவர் ஏ.திலீபன் மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் என பலர் கலந்துகொண்டிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மன்னாரிலுள்ள காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் முன் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது நீதி இல்லாத நாட்டில் காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் எதற்கு?, ஓ.எம்.பி. அலுவலகமே மன்னாரை விட்டு வெளியேறு, சர்வதேச விசாரணையே எமக்கு வேண்டும், இரண்டு இலட்சமும் வேண்டாம், மரண சான்றிதழும் வேண்டாம் என கோஷம் எழுப்பினர்.

காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளுக்காக 2 இலட்சம் ரூபா பணத்தை அரசு வழங்குவதாக தெரிவித்த கருத்தை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும், தமது பிள்ளைகளையும், உறவுகளையும் மீண்டும் எம்மிடம் ஒப்படைத்தால் நாங்கள் எமது வீடு நிலங்களை விற்று 4 இலட்சம் இல்லை 10 இலட்சமாவது தருகின்றோம் எனக் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்தனர்.

மன்னாரிலுள்ள ஓ.எம்.பி. அலுவலகத்தினால் எவ்வித பலனும் இல்லை எனவும் குறித்த அலுவலகம் மன்னாரிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அமெரிக்க மாநிலங்களின் அமைப்புக்கு தூதுவர் சமரசிங்க நற்சான்றிதழ் கையளிப்பு







மெக்சிக்கோ, டிரினிடாட் மற்றும் டொபாகோவுக்கு ஒரேநேரத்தில் அங்கீகாரம் பெற்ற அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவர் மஹிந்த சமரசிங்க, அமெரிக்க மாநிலங்களின் அமைப்பின் பொதுச் செயலாளரை 2022 ஒக்டோபர் 28, வெள்ளிக்கிழமை, வொஷிங்டன் டி.சி.யிலுள்ள அமைப்பின் தலைமையகத்தில் வைத்து சந்தித்தார்.

இந்த அந்தஸ்துள்ள 71 நாடுகளில் ஒன்றான அமைப்புக்கு நிரந்தரப் பார்வையாளராக நற்சான்றிதழ்களை அவர் கையளித்தார். பொதுச் செயலாளர் நாயகம் (முன்னாள் தூதுவர், உருகுவேவைச் சேர்ந்த வெளிநாட்டு அமைச்சர் மற்றும் செனட் உறுப்பினர்) உடனான சந்திப்பின் போது, தற்போதைய பொருளாதார சவால்களை சமாளிப்பதற்காக இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் இன்றுவரை அடையப்பட்ட முன்னேற்றங்கள் குறித்து இலங்கைத் தூதுவர் விளக்கினார்.

35 உறுப்பு நாடுகளில் (அமெரிக்கா, கனடா, பிரேசில் மற்றும் கியூபா) நான்கு பணிமனைகள் மட்டுமே இயங்கும் அமெரிக்க நாடுகளின் அமைப்பில் இலங்கையின் வதிவிட இராஜதந்திர பிரதிநிதித்துவத்தின் பற்றாக்குறைக்கு தூதுவர் விளக்கினார். ஏனைய மாநிலங்களுடனான உறவுகளை விரிவுபடுத்துவதற்கும் பலப்படுத்துவதற்கும் அமெரிக்க மாநிலங்களின் அமைப்பின் சிறந்த அலுவலகங்களைப் பயன்படுத்த முடியுமா என்பதை பொதுச் செயலாளரிடம் விசாரித்ததுடன், அதற்கு ஊக்கமளிக்கும் வகையில் சாதகமாக பதிலளிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின்போது அமெரிக்க மாநில நாடுகளின் அமைப்புடன் வர்த்தகத்தை மேலும் மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து குறிப்பிடப்பட்டன. இதுபோன்ற முயற்சிகளை பொதுச் செயலாளர் வரவேற்றார். இலங்கையைப் பார்வையிட தூதுவர் அல்மக்ரோவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதுடன், இதற்கு பொதுச் செயலாளர் சாதகமாக பதிலளித்தார்.

அமெரிக்க மாநில தலைமையக அமைப்பின் அதிகாரிகளும், இலங்கைத் தூதரகத்தின் இராஜதந்திர உத்தியோகத்தர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# தர்ஷன் தர்மராஜுக்கு ஆத்மசாந்திப் பிரார்த்தனை

மறைந்த நடிகர் தர்ஷன் தர்மராஜுக்கு 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை இறக்குவானை ரஷ்மி வரவேற்பு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு பிரார்த்தனை நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளதுடன், அதனைத் தொடர்ந்து மதிய உணவு வழங்கப்படவுள்ளது.

நடிகர் லிங்கநாதன் தர்ஷன் தர்மராஜ் கடந்த ஒக்டோபர் மாதம் 02ஆம் திகதி காலமானமை குறிப்பிடத்தக்கது.

# சூரன் போரில் வாள்வெட்டு யாழில் இருவர் காயம்

சூரன் பேரில் வாள்வெட்டுக்கு இலக்காகி இருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வட்டுக்கோட்டை கிழக்கு சித்தங்கேணியைச் சேர்ந்த நவரத்தினராசா ஜனந்தன் (வயது 33) மற்றும் வட்டுக்கோட்டை மேற்கை சேர்ந்த கிருஷ்ணகுமார் கஜானந்தன் (வயது 38) ஆகிய இருவருமே காயமடைந்துள்ளனர்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கரத்தை பங்குருமுருகன் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சூரன் போர் திருவிழா இடம்பெற்றது.

அதன்போது, ஆலயத்தில் இரு இளைஞர் குழுக்களுக்கு இடையில் தர்க்கம் ஏற்பட்டுள்ளது. தர்க்கம் கைக்கலப்பாக மாறி வாள்வெட்டில் முடிவடைந்தது.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

ஸ்ரீ லංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 31.10.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 118 2180 | 13 3025 |
| கனேடியன் டொலர் | 151 5620 | 163 6107 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 37 6036 | 40 6057 |
| யூரோ | 245 2370 | 260 3242 |
| ஜப்பான் யென் | 1 3060 | 1 41 0 |
| சிங்கப்பூர் டொலர் | 142 50 0 | 153 2188 |
| ஸ்ரேலிங் பவுன் | 304 813 | 321 2355 |
| சுவிஸ் பிராங் | 247 4451 | 264 2780 |
| ஐ.அ.டொலர் | 25 5426 | 260 10 2 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 852 4855 |
| குவைட் | குவைட் தினார் | 0,061 7 45 |
| ஓமான் | ஓமான் றியால் | 832 4762 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 7272 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 5472 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 8 72 |



## வடமாகாணத்தில் இடம்பெற்ற சூரசம்ஹார நிகழ்வுகள்




(மன்னார் நகர் நிருபர்)

கந்தசஷ்டி விரதத்தின் இறுதி நாளான நேற்று முன்தினம் (30) மன்னாரில் பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்றான திருக்கேதீஸ்வர ஆலயத்தில் பக்தர்கள் புடைசூழ சூரசம்ஹார நிகழ்வு திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குரு கருணானந்த குருக்கள் தலைமையில் இடம்பெற்றது.




(வவுனியா நிருபர்)

கந்தசஷ்டி விரதத்தின் இறுதி நாளான நேற்று முன்தினம் (30) வவுனியா கந்தசாமி ஆலயத்தில் மேளதாள வாத்திய இசை முழங்க, அந்தணச் சிவாச்சாரியர்கள், ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ ஆலயத்திலிருந்து வெளிவீதிக்கு வந்த முருகப்பெருமான், மணிக்கூட்டு கோபுரசந்தி உள்ளடங்கிய ஏ9 வீதியில் சூரனுடன் போர்செய்து, சூரனை வதம்செய்து பக்த அடியார்களுக்கு அருள்பாலித்தார்.

# நாச்சிக்குடா உள்ளிட்ட வடபுல முஸ்லிம் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க ஜனாதிபதி ஆணைக்குழு அவசியம்

## 5 ஆம் நாளாக நடைப் பயணம்




(வவுனியா நிருபர்)

நாச்சிக்குடா உள்ளிட்ட வடபுலத்து முஸ்லிம் களின் பிரச்சினையைத் தீர்க்க ஜனாதிபதி ஆணைக் குழுவொன்றை அமைக்க வேண்டுமென முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி இருவரால் கொழும்பு நோக்கி ஆரம்பித்த நடைப் பயணம் நேற்று முன்தினம் (30) மதவாச்சியை சென்றடைந்தது.

இதன்போது நடைப் பயணத்தில் ஈடுபட் டவர்களை மதவாச்சி பள்ளிவாசல் நிர்வாகத் தினர் மற்றும் அப்பகுதி முஸ்லிம் மக்கள் வரவேற் றதுடன், தமது ஆதரவையும் தெரிவித்தனர்.

நடைப் பயணத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவித்தபோது,

கடந்த 3 ஆம் திகதி எமது கிராமமான நாச்சிக் குடாவில் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை செய் தோம். இன அடக்குமுறைக்கு எதிராக செய்த எங்களது ஆர்ப்பாட்டத்திற்கு பின்னர் மேலும் பழிவாங்கல் அதிகரித்துள்ளது. இதனால் ஜனாதிபதியிடம் மகஜர் கையளிப்பதற்காக நடைப் பயணத்தை ஆரம்பித்தோம். 5ஆவது நாளாக மதவாச்சியை அடைந்துள்ளோம்.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டு எமக்கான நீதி வேண்டும். நாங்களும் உரிமைக்காக போராடுகின்றோம். கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்தில் எங்களுக்கு என்று யாரும் இல்லை. எந்தப் பிரதிநிதிகளும் இல்லை. நாங்கள் தென்பகுதியை நோக்கிதான் நீதிக்காக வந்திருக்கின்றோம். எங்களுக்காக அனைவரும் குரல் கொடுக்க வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தின் நாச்சிக்குடா என்னும் கிராமம் முஸ்லிம்கள் பூர்வீகமாக வாழ்ந்துவந்த கிராமம். இந்த கிராமத்திலிருந்து 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து புத்தளம் சென்று மீள 2009 இற்கு பின்னர் மீள்குடியேறினோம். நாங்கள் மீள்குடியேறியபோது எங்களது எல்லை நிர்ணயம் சுருக்கப்பட்டுள்ளது.

எமது வட்டாரத்தில் எல்லைகள் மாற்றப்பட் டுள்ளன. முஸ்லிம் மக்களின் காணிகளில் வேறு குடும்பங்களை குடியேற்றியுள்ளனர். இரணைதீவு பகுதியில் மக்களை குடியேற்றியுள் ளனர். நாம் சமாதானமாக வாழ்கின்றோம். எங்களது சந்ததியினர் புத்தளத்திலிருந்து மீண்டும் வர முடியாமல் இருப்பதற்கு காரணம் எங்களது பிரச்சினைகள் தீர்க்கப்படாமை. நாம் இடம்பெயர்ந்தபோது விட்டுச் சென்ற பொருட்களுக்காக நஷ்ட ஈடு வழங்கப்படவில்லை.

நாங்கள் வெளியேறி இன்றுடன் 32 வருடங்கள் ஆகிவிட்டன. பள்ளிக்குடா கிராமத்தில் எமது இனம் புறக்கணிக்கப்பட்டுள்ளது. வடபுலத்து முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே, எமக்குரிய இடங்களில் வாழ விடுமாறு கோரி ஜனாதிபதியை சந்திப்பதற்கு செல்கின்றோம். வடபுலத்து முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் இதன் மூலம் தீர்க்கப்பட வேண்டும் - எனத் தெரிவித்தனர்.

# வடக்கில் அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த அனைவரதும் ஒத்துழைப்பு தேவை

## நீதி அமைச்சர் யாழில் தெரிவிப்பு

வடக்கில் அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு முப்படையினரால் மாத்திரம் முடியாது. அனைவரதும் ஒத்துழைப்பு தேவை - என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடமாடும் சேவையை ஆரம்பித்து வைத்த பின்னர் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது வடக்கில் ஒரு புதிய பிரச்சினை உருவாகி வருகிறது. இலங்கை முழுவதும் இந்த போதைப்பொருள் பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. ஆனால், வடபகுதியில் அது மிகவும் அதிகளவில் காணப்படுகிறது.

கடந்த 2 மாதத்திற்குள் 508 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். இளைஞர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கும் செயற்பாடு தொடர்பில் ஒரு பொறுப்பாக செயற்படவேண்டியுள்ளது. அந்த விடயத்தை தடுப்பதற்கு நாங்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டியதாக உள்ளது.

குறிப்பாக, வடமாகாணத்தில் இருந்த போதைப்பொருள் பாவனை மிக அதிகளவில் காணப்படுகின்றது. கடந்த ஒருசில மாதங்களாக போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

அதேபோல் போதைப்பொருட்களுடன் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். இது ஏனைய இடங்களோடு ஒப்பிடும்போது, அதிகளவாகவும், விபரீதமானதாகவும் சிறுவர்களின் எதிர்காலத்தைப் பாழாக்கும் பாரதூரமான செயற்பாடாகவும் காணப்படுகிறது.

அத்தோடு, இந்த விடயம் போதைப்பொருள் வியாபாரிகளால் உருவாக்கப்படுகிற செயற்பாடாக காணப்படுகின்றது. அதாவது, யாழ். மாவட்டம் மிகவும் ஒரு பாதிப்பான நிலையில் காணப்படுகின்றது. இந்த நாட்டின் பிரஜை என்ற ரீதியில் போதைப்பொருள் பாவனைக்கு எதிராக நாங்கள் உடனடியாக ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக, முப்படையினர், பொலிஸார் அனைவரையும் இணைத்து இதனை தடுப்பதற்கான நடவடிக்கையை உடனே எடுப்பதற்கு நான்



தயாராக உள்ளேன்.

குறித்த பிரச்சினையை ஆராய்வதற்காக விசேட கூட்டம் ஒன்றினைக் கூட்ட உள்ளேன். மக்களின் பிரதிநிதிகளையும் இந்தக் கூட்டத்திற்கு அழைக்க உள்ளேன். இந்தக் கூட்டத்தில் ஆராய்ந்து மாலை 4 மணியளவில் வட மாகாண ஆளுநர் தலைமையில் கூட்டத்தினைக் கூட்ட உள்ளேன். அந்தக் கூட்டத்தில் சமூகமட்ட பிரதிநிதிகள், அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் பலரையும் ஒன்றிணைத்து இந்த போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு உபரியான செயற்பாட்டை முன்னெடுக்க முடியும் என்பது தொடர்பில் நான் ஆராயவுள்ளேன் - என்றார்.

# முல்லைத்தீவில் கரைவலைத் தொழிலாளி கடல் அலையில் சிக்குண்டு உயிரிழப்பு

முல்லைத்தீவு, கருநாட்டுக்கேணி கடற்கரையில் கரைவலைத் தொழில் செய்துவரும் 23 வயது தொழிலாளி ஒருவர் கடலில் இழுத்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை (29) காலை கருநாட்டுக் கேணி கடற்கரைப் பகுதியில் கரைவலைக்காக கடலில் இறங்கி கயிறு இழுத்தவேளை கடல் அலையில் இழுத்துச் செல்லப்பட்டு காணாமல் போன நிலையில், அந்த மீனவரைத் தேடும் நடவடிக்கையில் கடற்றொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்நிலையில், நேற்று முன்தினம் (30) காலை கொக்குளாய் கடற்கரையில் காணாமல்போன மீனவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது.

சடலத்தை மீட்ட மீனவர்கள் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டுசென்றுள் ளதுடன், சம்பவம் தொடர்பில் கொக்கிளாய் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்கள்.

இதன்போது 23 வயது மீகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளியே உயிரிழந்துள்ளார்.



உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதி அம்மன் ஆலயத்தின் கந்தசஷ்டி இறுதி நாள் சூரசம்ஹாரம் (30)ஆலயத்தின் முன்றலில் இடம்பெற்றது.

# அரசியல்வாதியின் பதிவில்லாத வாகனம்; ஓட்டிச்சென்ற மெய்ப்பாதுகாவலர் கைது!



சட்டவிரோதமான முறையில் உருவாக்கப்பட்ட சொகுசு ஜீப் வண்டியொன்றை பாணந்துறை பொலிஸார் கைப்பற்றியதுடன், அதனை ஓட்டிச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரையும் நேற்று முன்தினம் (30) காலி கராப்பிட்டியவில் வைத்து கைதுசெய்துள்ளனர்.

முன்னாள் பிரதியமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகமவிற்கு சொந்தமானதாக கூறப்படும் இந்த வாகனத்தின் பதிவு தொடர்பான ஆவணங்கள் சாரதியாக இருந்த பொலிஸ் உத்தியோகத்தரிடம் இருக்கவில்லை.

ஜீப் வண்டியை முன்னாள் பிரதி அமைச்சரின் தனிப்பட்ட காவலராக கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஓட்டிச் சென்றபோதே இந்த கைது இடம்பெற்றுள்ளது.

நிஷாந்த முத்துஹெட்டிகம தற்போது நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத போதிலும் அவருக்கு பாதுகாப்புக்காக பொலிஸ் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளதாக விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

நிஷாந்த முத்துஹெட்டிகம இந்த ஜீப்பை சில காலமாக பயன்படுத்தி வருவதாகவும், அதனை மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்து அதன் பதிவு எண் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நிஷாந்த முத்துஹெட்டிகமவிடமும் விசாரணை நடத்தப்படும் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



கல்வியமைச்சின் முஸ்லிம் பிரிவின் ஏற்பாட்டில் மாகாண பாடசாலைகள் கலந்துகொண்ட மீலாதுன் நபி விழா கண்டி பதியுத்தீன் மஹ்மூத் மகாவித்தியாலயத்தில் 25.10.2022 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் பேருவளை சீனன்கோட்டை அல்-ஹுமைஸரா தேசிய பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்டு கஸீதா பாடினர். இவர்கள் சீனன்கோட்டை ஹழரா ஜெமாஅத்தின் ஆசிகுர் ரஸூல் கஸீதா குழுவினர் என்பது குறிப்பிடத்தக்கது. (படம் - பேருவளை பீ.எம்.முக்தார்)



சிலாபம், மாதம்பை, ஹலஹிட்டியாவ ஸ்ரீ கலியுகவரத முருகன் ஆலயத்தில் வருடாந்த கந்தசஷ்டி விழாவில் ஞாயிற்றுக்கிழமை (30.10.2022) ஆலய முன்றலில் சூரசம்ஹாரம் நடைபெற்றது. இதன்போது மாலை 4.00 மணியளவில் வசந்த மண்டபப் பூஜையை அடுத்து மாலை 4.30 மணியளவில் ஆலய முன்றலில் சூரசம்ஹாரம் நடைபெற்றது.

# மீலாத் தினத்தை முன்னிட்டு பாணந்துறையில் மாநாடு



முகம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீலாத் தினத்தை முன்னிட்டு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா - பாணந்துறைக் கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாபெரும் மாநாடு கடந்த ஞாயிறு (23.10.2022) விமரிசையாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா - பாணந்துறைக் கிளையின் தலைவர் அஷ்ஷெய்க் அபுல்கலாம் (தீனி) தலைமையில் பாணந்துறை ஜீலான் தேசிய பாடசாலையின் உம்மு மலீஹா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது.

இம்மாநாட்டின் விசேட அதிதிகளாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா - களுத்துறை மாவட்டக் கிளையின் கௌரவ தலைவர் அஷ்ஷெய்க் அப்துர் ரஹ்மான் (பஹ்ஜி) மற்றும் அதன் உபதலைவர் அல்-உஸ்தாத் தஸ்னீம் (மக்கி) ஹஸ்ரத் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இந்நிகழ்வில் சிறப்பு சொற்பொழிவு பிரபல பேச்சாளரான அஷ்ஷெய்க் ஹஸன் பரீத் (பின்னூரி) இனால் நிகழ்த்தப்பட்டது.

மேலும், பகுதிநேர மத்ரஸா மாணவர்களது சமய கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்விற்கு உலமாக்கள், தனவந்தர்கள், அதிபர்கள், வைத்தியர்கள், பொலிஸ் உயரதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டிருந்ததுடன், இந்நிகழ்வில் விசேட அங்கமாக பாணந்துறை போதனா வைத்தியசாலை மற்றும் கேத்துமதி மகளிர் வைத்தியசாலைக்கும் மருத்துவ உபகரணங்கள் மீலாத் தின சிறப்பை முன்னிட்டு வழங்கிவைக்கப்பட்டன. இதன்போது ஏழைகளுக்கான உணவு வங்கியொன்றும் திறந்து வைக்கப்பட்டது.

# நாட்டை சாம்பலாக்கிவிட்டு மீளெழ முயற்சிக்கும் மொட்டுக் கட்சியினருக்கு மக்கள் வாய்ப்பை வழங்குவார்களா?

## கொட்டகலையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி



(க.கிஷாந்தன்)

"பெருந்தோட்ட மக்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்குவேனென நான் கூறியபோது, எனக்கு எதிராக மொட்டுக் கட்சியினர் சேறு பூசினர். ஏளனம் செய்தனர். இவர்கள்தான் உரத்துக்குத் தடை விதித்து, பெருந்தோட்டத்துறைக்கு பெரும் தீங்கு விளைவித்தனர். பெருந்தோட்ட மக்களை இருளுக்குள் தள்ளிய இவர்கள்தான், இன வாதத்தைக் கையில் எடுத்தனர். பெருந்தோட்ட மக்களை மட்டுமல்ல, ஒட்டுமொத்த நாட்டு மக்களையுமே இவர்கள் குழிக்குள் தள்ளினர்" - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அறிவித்தார்.

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் 'பிரபஞ்சம்' எனும் திட்டத்தின் கீழ் கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் அமைந்துள்ள கேம்பிரிட்ஜ் கல்லூரிக்கு கடந்த சனிக்கிழமை (29) காலை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாடசாலை பஸ் ஒன்றினை வழங்கினார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் வேண்டுகோளுக்கிணங்க, இந்த பஸ் கையளிக்கப் பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்கும்திட்டம் தொடர்பில் சிலர் விமர்சனங்களை முன் வைத்தனர். சாத்தியமில்லை எனவும் கதை கட்டினர். அது தவறு, எமது ஆட்சியில் நிச்சயம் சிறுதோட்ட உரிமையாளர்கள் உருவாக்கப்படுவார்கள். ஏற்றுமதித்துறையில் புரட்சி இடம்பெறும். தேயிலை பயிரிடக்கூடிய இடங்களை தரிசு நிலங்களாக வைப்பதில் பயன் கிட்டாது.

பெருந்தோட்ட மக்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்குவேனென நான் கூறியபோது, எனக்கு எதிராக மொட்டுக் கட்சியினர் சேறுபூசினர். ஏளனம் செய்தனர். இவர்கள்தான் உரத்துக்கு தடை விதித்து, பெருந்தோட்டத்துறைக்கு பெரும் தீங்கு விளைவித்தனர். பெருந்தோட்ட மக்களை இருளுக்குள் தள்ளிய இவர்கள்தான், இனவாதத்தைக் கையில் எடுத்தனர். பெருந்தோட்ட மக்களை மட்டுமல்ல, ஒட்டுமொத்த நாட்டு மக்களையுமே இவர்கள் குழிக்குள் தள்ளினர்.

இவ்வாறு நாட்டு மக்களை துன்பத்துக்குள் தள்ளிவிட்டு, சாம்பல் மேட்டிலிருந்து மீண்டெழுவோமென தற்போது சூளுரைத்து வருகின்றனர். நாட்டை சாம்பலாக்கிவிட்டுதான் அவர்கள் மீண்டெழ பார்க்கின்றனர். அவர்களின் மீள் எழுச்சி மக்களின் கைகளில்தான் உள்ளது என்பதை மறந்துவிடக்கூடாது.

நாட்டு வளங்களை சூறையாடிய, நாட்டை வங்குரோத்து அடையச்செய்து, தமது குடும்பத்தை செல்வந்தர்களாக்கியவர்களுக்கு மீண்டெழும் வாய்ப்பை மக்கள் வழங்குவார்களா?

நாட்டில் தற்போதுள்ள அரசாங்கமும் வங்குரோத்து அரசாங்கம்தான். அதனால்தான் மக்கள்மீது வரிச்சுமை திணிக்கப்படுகின்றது. எமது நாட்டிலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணம் எமது ஆட்சியில் மீளப்பெறப்படும். களவாடப்பட்ட சொத்துகள் நாட்டுக்கு கொண்டு வரப்படும். இதற்கு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் நடவடிக்கை எடுக்கப்படும்" - என்றார்.



பதுளை அருள்மிகு ஸ்ரீ மாணிக்க விநாயகர் கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் நேற்று கந்தசஷ்டி விரதப் பூர்த்தி விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. பூஜைகள் இடம்பெறுவதையும், ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிகள் உள்வீதி உலா வருவதையும், பிரதான காளாஞ்சி வழங்கப்படுவதையும், விரதப் பூர்த்தி இடம்பெறுவதையும், நிகழ்வுகளில் பதுளை மாவட்ட எம்.பி. வடிவேல் சுரேஷ் கலந்துகொண்டிருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் - எம்.செல்வராஜா)

# ஹட்டன் பிரதான பஸ் தரிப்பு நிலையத்தைப் புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை




நீண்டகாலமாக சேதமடைந்து காணப்படும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான ஹட்டன் பிரதான பஸ் தரிப்பிடத்தைப் புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

ஹட்டன் பிரதான பஸ் தரிப்பிடமானது நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் சேதமடைந்து குண்டும் குழியுமாக காணப்படுகிறது. மழைக் காலங்களில் சேதமடைந்துள்ள பகுதிகளில் நீர்த் தேங்கி நிற்பதால் மக்கள் மிகவும் சிரமத்துக் குள்ளாக வேண்டிய நிலை ஏற்படுகிறது.

குறித்த பகுதிகளிலுள்ள கழிவகற்றல் நடவடிக்கைகளில் மிகவும் மோசமான நிலையே காணப்படுகிறது. பஸ் தரிப்பிடத்தைச் சுற்றிலும் குப்பைகள் அகற்றப்படாமல் துர்நாற்றம் வீசுவதாக பிரதேசவாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஹட்டன் - டிக்கோயா நகர சபையினர் குறித்த பகுதியில் கழிவகற்றல் முறைமையை முறையாக மேற்கொள்ளவில்லையென பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், வயோதிபர்கள் என அன்றாடம் இந்த பஸ் தரிப்பிடத்தைப் பயன்படுத்துவோர் அசௌகரியங்களுக்குள்ளாகின்றனர்.

நாட்டில் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் நிலவுவதுடன், டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் பல்வேறு இடங்களிலும் பொறுப்புவாய்ந்த அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இருப்பினும், இவ்வாறான அன்றாடம் மக்கள் ஒன்றுகூடும் இடங்களை அதிகாரிகள் கண்டும் காணாமல் இருப்பது கேள்விக்குள்ளாகின்றது.

சாதாரண மக்களுக்கு டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை வைத்திருப்பதாக தெரிவித்து தண்டப்பணம் அறவிடும் அதிகாரிகள் இவ்வாறான பொது இடங்களை சுத்தப்படுத்தாமல் இருப்பது ஏன்? உரியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காதது ஏன்?

குறித்த பகுதியை கடந்து செல்லும் பலரும் முகம்சுழிக்கும் வகையிலேயே குறித்த பகுதி காணப்படுகிறது. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனே இதுகுறித்து தலையிட்டு நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# பவள விழாவில் கௌரவிக்கப்பட்ட சமூக செயற்பாட்டாளர் நடராஜ்





கடந்த ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக இங்கிரிய, றைகம் மண்ணில் மகத்தான மக்கள் பணி செய்தவரும், ஹொரணை, பிரதேச சபை உறுப்பினரும் சமூக செயற்பாட்டாளருமான முருகையா நடராஜ், றைகம், கீழ்ப்பிரிவில் அமைந்திருக்கும் சிறப்பு விருந்தினர் விடுதியில் நடைபெற்ற பவள விழாவில் கௌரவிக்கப்பட்டார். ஒக்டோபர் 26ஆம் திகதி தமது 75ஆவது பிறந்த நாள் விழாவைக் கொண்டாடிய நடராஜ் தலைவரின் நன்மதிப்புக்குரிய நட்பு உள்ளங்களின் ஏற்பாட்டில் மிகவும் சிறப்பாக நடைபெற்ற இந்த நிகழ்வில் 'மக்கள் தலைவர்' என்ற விருது நட்பு உள்ளங்களின் சார்பிலும் புதிய வானம் வலைக்காட்சி சார்பிலும் வழங்கப்பட்டது. சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டிருந்த கொழும்பு, லயன்ஸ் கிளப் வி.கே.பாலசுப்ரமணியம் மற்றும் றைகம் தோட்டத் தலைவர் ராமராஜ், ஆன்மீக செயற்பாட்டாளர் மருதமுத்து சிவகணேசரட்ணம் ஆகியோரினால் தலைவருக்கு கௌரவம் அளிக்கப்பட்டு விருது வழங்கப்பட்டது. தலைவருக்கான பாராட்டு விழாவில் சிறப்பு விருந்தினர் லயன் வி.கே.பாலசுப்ரமணியம் மற்றும் சிறப்பு விருந்தினர்களால் பவள விழா நாயகனுக்கு புகழார சிறப்புரையாற்றப்பட்டதுடன், நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கு சிறப்பான விருந்துபசாரம் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய முஸ்லிம் சங்கத்தின் வாசிப்பு மாத நிகழ்ச்சிகள்



கம்பஹா மாவட்ட ஐக்கிய முஸ்லிம் சங்கம் ஏற்பாடு செய்திருந்த வாசிப்பு மாத நிகழ்ச்சிகள் சனிக்கிழமை வத்தளை ஹுனுப்பிட்டிய ஷாகிரா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

மேற்படி விழாவில் வளவாளரும் பண்நூல் ஆசிரியருமான டாக்டர் ரவூப் ஸெய்ன் விசேட உரை மக்களின் பெறும் வரவேற்பைப் பெற்றதுடன், முஸ்லிம்கள் வாசிப்பு விடயத்தில் மிகவும் உதாசீனமாக இருப்பதை பல உதாரணங்களுடன் எடுத்துக் கூறினார்.

மேலும் இவ்விழாவில் சிங்கள மொழியிலான பேச்சுப் போட்டியும் தமிழ் மொழியில் கட்டுரைப் போட்டியும் நடைபெற்று முதல் மூன்று ஸ்தானங்களை பெற்றோருக்கு நினைவுச் சின்னங்களை பிரதம அதிதியாக கலந்துகொண்ட சீனத் ட்ரேடிங் கம்பனி உரிமையாளரும் பணிப்பாளருமான அல்-ஹாஜ் ஏ.எச்.எம்.மாஹிர் வழங்கினார்.

ஜே ஜே அறக்கட்டளை நிதியத்தின் பணிப்பாளர் அல்ஹாஜ். ஐ.வை.எம். ஹனிப் முன்னாள் சவூதி அரேபியாவுக்கான இலங்கை தூதுவர் அல்-ஹாஜ் ஹுசைன் முஹம்மத், முன்னாள் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி அல்ஹாஜ் எம்.எம்.ஏ. கபூர், முன்னாள் பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் அல்ஹாஜ் ஏ.எஸ்.முஹம்மத், அமானா வங்கி முகாமையாளர் அல்ஹாஜ் மர்ஷாஸாத் பாரி ஆகியோரும் கலந்துகொண்டனர். பாடசாலை அதிபர் எஸ்.சீ.பௌஸ்தீனும் உரையாற்றினார்.

சங்கத்தின் தலைவர் ஜனாப் ஏ.எச்.எம்.நௌஃபர் வரவேற்புரையும் இணைச் செயலாளர் எம்.கே.ஜுமாட் நன்றி உரையும் நிகழ்த்தினர். கிண்ணியா அமிர் அலி நிகழ்வை தொகுத்து வழங்கினார்.

(செய்தியும் படங்களும் - எம்.நசார்)

# தர்ஷன் தர்மராஜ் நினைவாக இறக்குவானையில் ஊடகக் கருத்தரங்கு





மறைந்த நடிகர் தர்ஷன் தர்மராஜின் நினைவாக இறக்குவானை பரியோவான் தமிழ் கல்லூரியில் ஊடக செயலமர்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. கல்லூரியின் அதிபர் பூபாலபிள்ளை கமலேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தர்ஷனின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. தர்ஷன் தர்மராஜின் பாரியார் திருமதி சுபாஷினி தர்மராஜ், தந்தை எஸ்.லிங்கநாதன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர். (படப்பிடிப்பு: சிராஜ் மொஹமட்)




# இன்றுடன் முற்றுப்புள்ளியாகுமா ஆசிய சம்பியன்களின் அரையிறுதிக் கனவு?



## கட்டாய வெற்றியை நோக்கி ஆப்கானுடன் பலப்பரீட்சை

(ஏ. அகீல் சிஹாப்)

நடப்பு ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் சுப்பர் 12 சுற்றில் இலங்கை அணி இன்றைய தினம் கட்டாய வெற்றியை நோக்கி ஆப்கானிஸ்தான் அணியை எதிர்கொள்கிறது. பிரிஸ்பேனில் பகல் போட்டியாக நடைபெறும் இந்த ஆட்டம் இலங்கை நேரப்படி காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகிறது.




சுப்பர் 12 சுற்றில் இரு குழுக்களிலும் ஒவ்வொரு குழுவிலும் முதலிரண்டு இடங்களை பிடிக்கின்ற அணிகள் நேரடியாக அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும். அந்த வகையில் ஆசியக்கிண்ண சம்பியன்களான இலங்கை அணி அரையிறுதிச் சுற்றுக்கு தகுதிபெறுகின்ற இறுதி வாய்ப்பு இன்றைய தினம் காணப்படுகிறது.

சுப்பர் 12 சுற்றின் முதல் போட்டியில் அயர்லாந்து அணியை அபாரமாக வீழ்த்திய இலங்கை அணி, அடுத்தடுத்து இரு தோல்விகளை சந்தித்தது. அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய இரு பலம் பொருந்திய அணிகளுடன் இலங்கை அணிக்குத் தோல்வி ஏற்பட்டது.

குழு 1இல் இருந்து நியூசிலாந்து அணி அரைறுதிப் போட்டிக்குத் தகுதிபெறுவது பெரும்பாலும் உறுதியாகியிருக்கும் நிலையில், எஞ்சிய இன்னுமொரு அணியை தெரிவுசெய்வதற்காக ஏனைய அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

இலங்கை அணிக்கு இன்னும் இரண்டு போட்டிகள் மீதமிருக்கின்றன. இன்றைய தினம் ஆப்கானிஸ்தான் அணியை எதிர்த்தாடும் இலங்கை அணி எதிர்வரும் 5ஆம் திகதி கடைசி ஆட்டத்தில் இங்கிலாந்து அணியை எதிர்கொள்கிறது. குறித்த இரு ஆட்டங்களையும் இலங்கை அணி சிறந்த நெட் ரன்ரேட் பெறுமானத்துடன் வெற்றிகொள்ளும் போது 6 புள்ளிகளுடன் அரையிறுதிக்குத் தகுதிபெறும் வாய்ப்பு காணப்படும்.

ஆனால், மழையால் எதிரணிகளின் ஒரு சில போட்டிகள் கைவிடப்பட்டதால் இறுதி முடிவு எவ்வாறு அமையும் என்பதை யாராலும் கணிக்க முடியாது. இன்று போட்டி நடைபெறும் பிரிஸ்பேனில் மழை பெய்யக்கூடிய வாய்ப்பு அதிகமாக காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. அந்த வகையில் இன்று மழை பெய்து போட்டி முழுமையாக கைவிடப்பட்டால், இலங்கை அணி தனது அரையிறுதிக் கனவுக்கு இன்றுடன் விடைகொடுக்கும்.

எங்கள் சிங்கங்களை வாழ்திட
நீங்களும் இணைந்துக்கொள்ளுங்கள்
QR குறியீட்டை Scan செய்து உங்கள் வாழ்த்துகளை பதிவு செய்யுங்கள்
தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog
எதிர்காலம் இன்றே.
Champion
Germ Fighting Real Soap

## மதீனா ஜூனியர்ஸ் 2022 கிரிக்கெட் தொடரில் மதீனா சூப்பர் ஸ்ரைகெர்ஸ் அணி சம்பியன்



சம்மாந்துறை மதீனா விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இளையோருக்கான மென்பந்து கிரிக்கெட் தொடர் அண்மையில் சம்மாந்துறை தேசிய பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. மதீனா விளையாட்டுக் கழகத்தின் வளர்ந்து வரும் வீரர்களை 4 அணிகளாக பிரித்து இத்தொடர் இடம்பெற்றது.

விறுவிறுப்பாகச் சென்ற இத்தொடரின் இறுதிப் போட்டிக்குள் மதீனா சூப்பர் ஸ்ரைகெர்ஸ் மற்றும் பியர்லெஸ் மதீனா ஆகிய அணிகள் நுழைந்தன. இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பியர்லெஸ் மதீனா அணி துடுப்பாட்டத்தை தீர்மானித்து, நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களில் 45 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. தொடர்ந்தும் 46 என்ற வெற்றியிலக்கை நோக்கிக் களமிறங்கிய மதீனா சூப்பர் ஸ்ரைகெர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களில் ஓட்ட இலக்கை அடைந்து இறுதிப்போட்டியில் வெற்றியடைந்தது.



இறுதிப்போட்டியில் அதிதிகளாக இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் அமீர் அப்னான், ரோயல் மெட்ரிக் அணியின் ஆலோசகர் ரிஷா, மதீனா விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## இந்தியாவின் தோல்வியால் நெருக்கடியான பாகிஸ்தானின் அரையிறுதி வாய்ப்பு



தென்னாபிரிக்க அணியுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணி தோல்வியடைந்ததால், பாகிஸ்தான் அணி அரையிறுதிக்கு தகுதிபெறுவதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்தியா மற்றும் சிம்பாப்வேக்கு எதிராக தோல்வியடைந்த பாகிஸ்தான் அணி நெதர்லாந்தை 6 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது. தென்னாபிரிக்க அணியுடனான போட்டியில் இந்தியா வெற்றி பெற்றிருந்தால் பாகிஸ்தானின் அரையிறுதி வாய்ப்பு சற்று அதிகரித்திருக்கும்.

குழு 2இன் சுப்பர் 12 ஆட்டத்தில் இந்தியா மற்றும் சிம்பாப்வேயிடம் முதல் இரண்டு ஆட்டங்களில் தோல்வியடைந்த பின்னர், பாகிஸ்தானுக்கு அரையிறுதிக்கான வாய்ப்பு மங்கிவிட்டது. தென்னாபிரிக்காவிடம் இந்தியா தோல்வியடைந்து விட்டதால் பாகிஸ்தானின் நிலைமை இன்னும் மோசமாகிவிட்டது.

பாகிஸ்தான் அரையிறுதிக்கு முன்னேற வேண்டும் என்றால் எஞ்சிய இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெறுவது மட்டுமின்றி, மீதமுள்ள அணிகளின் வெற்றியும் தோல்வியை பார்க்க வேண்டும். பாகிஸ்தான் அணி நாளை மறுதினம் தென்னாபிரிக்காவையும் 6ஆம் திகதி பங்களாதேஷையும் எதிர்கொள்கிறது.

தென்னாபிரிக்கா இந்தியாவை தோற்கடித்த பிறகு பாகிஸ்தானுக்கு அரையிறுதிக்கு செல்வதற்கான வாய்ப்பு மிகவும் குறைந்துவிட்டது. இனி நெதர்லாந்துடன் தென்னாபிரிக்கா விளையாடுகிறது. தென்னாபிரிக்க அணியின் தற்போதைய ஃபார்மைப் பார்க்கும்போது நெதர்லாந்திற்கு எதிரான அவர்களின் வெற்றி பிரம்மாண்டமாகவே இருக்கலாம்.

இன்னொரு பக்கம் இந்தியா தென்னாபிரிக்காவிடம் தோற்றிருந்தாலும், பங்களாதேஷையும் சிம்பாப்வேயையும் வெல்ல முடியும் என்று நம்பலாம். அடுத்த இரண்டு ஆட்டங்களிலும் இந்தியாவும் தென்னாபிரிக்காவும் தோற்றால் மட்டுமே பாகிஸ்தான் அரையிறுதிக்கு முன்னேற வழி கிடைக்கும். ஆனால், இதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு.

## சம்பியனான கிண்ணியா அல்-அமீன் வித்தியாலய அணி



(சீனாக்குடா நிருபர்)

அகில இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் திருகோணமலை மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையே நடத்தப்பட்ட 14 வயதிற்குக் கீழ்ப்பட்டோருக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் கிண்ணியா அல்-அமீன் வித்தியாலய அணி 2022ஆம் ஆண்டுக்கான சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.


இந்தத் தொடரின் இறுதிப்போட்டி அண்மையில் கிண்ணியா எழிலரங்கு மைதானத்தில் நடைபெற்றது. இதில் அல்-அமீன் வித்தியாலய அணி கிண்ணியா மத்திய கல்லூரி அணியை எதிர்த்தாடி பெனால்டி உதை மூலம் வெற்றி பெற்று இவ்வருட சம்பியன் பட்டத்தை தனதாக்கிக் கொண்டது.

இந்தத் தொடரில் மொத்தம் 18 அணிகள் பங்குபற்றியிருந்தன. இதில் கந்தளாய் அல்-தாரிக் தேசிய பாடசாலை, கிண்ணியா அப்துல் மஜீத் வித்தியாலயம், கிண்ணியா வானல புஹாரி மகா வித்தியாலயம், கிண்ணியா அல்-அமீன் வித்தியாலயம், கிண்ணியா மத்திய கல்லூரி மற்றும் கிண்ணியா ஆண்கள் பாடசாலை ஆகிய ஆறு அணிகள் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றிருந்தன.

அகில இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனத்தின் இணைப்பாளரும் கிண்ணியா உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவருமான ஏ.எல்.எம். நபீல் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சம்பியன் கிண்ணத்தை வழங்கிவைத்தார்.



## தலைமையைத் துறக்கமாட்டேன் என்பதில் உறுதியான பூரன்



இரு தடவைகள் இருபதுக்கு 20 உலகக்கிண்ண சம்பியன் பட்டம் வென்ற ஒரே அணியான மேற்கிந்திய தீவுகள் அணி நடப்பு இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரில் முதல் சுற்றுடன் வெளியேறியது. இதையடுத்து அணியின் தலைமைப் பயிற்சியாளர் பில் சிம்மன்ஸ் தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்குப் பிறகு அவர் விடைபெறுகிறார்.

இந்நிலையில், மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைவர் நிக்கொலஸ் பூரன் தன்னுடைய நிலைப்பாடு குறித்து தெரிவித்ததாவது,

“எதிர்காலம் எப்படியிருக்கும் என்று தெரியவில்லை. அனைவருக்கும் இது நல்ல பாடமாக இருந்தது. அடுத்து என்ன நடக்கும் என்பதைக் காலம்தான் சொல்லவேண்டும். இப்போது அவரவர் திறமையில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். ஓய்வு காயத்தைக் குணமாக்கும். உள்ளுக்குள் மிகுந்த வேதனையுடன் உள்ளோம். இந்த வேதனையை ஊக்கமாக்கிக்கொள்ள வேண்டும். வலுவான அணியாக மீண்டு வரவேண்டும்.

தலைமை குறித்து கடந்த சில மாதங்களாக யோசனை செய்து வருகிறேன். கிரிக்கெட் விளையாடுவது என் கனவு. இதற்கு முன்பு மிகப்பெரிய சரிவைச் சந்தித்துள்ளேன். எனக்கு கார் விபத்தில் காலில் காயம் ஏற்பட்டு பிறகு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இப்போது இன்னொரு சோதனை. நான் சவால்களை எதிர்கொள்வதில் ஆர்வமுள்ளவன். இது இன்னொரு சவால். இந்தத் தோல்வி என்னைத் தடுத்து நிறுத்தாது. இந்த அனுபவங்களில் இருந்து பாடங்கள் கற்றுக் கொள்வேன்” என்றார்.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## தேசிய மட்ட கபடிப் போட்டியில் நிந்தவூர் அல்-மதீனா வித்தியாலயம் சம்பியன்



(எம்.என்.எம்.அப்ராஸ்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான 17 வயது பிரிவினருக்குட்பட்ட ஆண்களுக்கான தேசிய மட்ட கபடிப் போட்டியில் நிந்தவூர் அல்-மதீனா தேசிய பாடசாலை கபடி அணி வெற்றி பெற்று குறித்த பிரிவில் தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

இறுதிப் போட்டியில் கல்முனை கல்வி வலயத்திலுள்ள நிந்தவூர் அல்-அஷ்ரக் மற்றும் அல்-மதீனா தேசிய பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவினருக்குட்பட்ட கபடி அணிகள் அண்மையில் கேகாலை உள்ளக அரங்கில் மோதின. இதில் அல்-மதீனா தேசிய பாடசாலை முதலிடத்தைப் பெற்று சம்பியனானது.

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

(கோணாவத்தை நிருபர்)

அக்கரைப்பற்று பிரதேசத்தில் கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்குக் கிடைக்கப்பட்ட இரகசிய தகவலின்படி உப பொலிஸ் பரிசோதகர் பகிதரன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்திற்குச் சென்று நபர் ஒருவரை கைதுசெய்துள்ளதுடன், அவரிடமிருந்து 1500 மில்லிகிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (31) ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மோசடி செய்யப்பட்ட பிரிவேல்த் குளோபல் நிதி, திலினி பிரியமாலினியிடம் சிக்கியிருக்கிறதா?

## பாதிக்கப்பட்டவர்கள் அரசிடம் விசாரணை கோருகின்றனர்

(நூருல் ஹுதா உமர்)

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் தமிழ்பேசும் மக்களிடமிருந்து 1,750 மில்லியன் ரூபா அடங்கலாக நாடு முழுவதிலும் 2,000 மில்லியன் ரூபா அளவில் மோசடி செய்துவிட்டு கடல் வழியாக சட்டவிரோதமாக தமிழகத்தில் நுழைந்து சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரிவேல்த் குளோபல் நிதி நிறுவன பிரதானி ஷிஹாப் ஷரீப், அவரது பாரியார் பர்ஸானா மாக்கர் ஆகியோரை இலங்கைக்கு நாடுகடத்த வேண்டுமென பிரிவேல்த் குளோபல் பாதிக்கப்பட்ட அமைப்பினர் ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்புத் தரப்பினருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.




பிரிவேல்த் குளோபல் பாதிக்கப்பட்ட அமைப்பினர் நேற்று முன்தினம் (30) மாலை சாய்ந்தமருது பிரதேசத்தில் ஊடகங்களிடம் இது தொடர்பாக கருத்து வெளியிட்டனர்.

பிரிவேல்த் குளோபல் பாதிக்கப்பட்ட அமைப்பின் சார்பில் அங்கு கருத்து தெரிவித்த ஏ.றிஸ்வாட், ஏ.ஆர்.எம்.ஜெமீல் ஆகியோர்,

பிரிவேல்த் குளோபல் நிதி நிறுவனத்தினால் பாதிக்கப்பட்ட 1,400 குடும்பங்கள் பொருளாதார நெருக்கடியினால் நிர்க்கதியாகியுள்ளன. குருவி சேர்ப்பதுபோன்று சேமித்த பணம், வீடு கட்ட சேமித்த பணம், அங்கவீனர்களின் பணம் என பலரும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளோம்.

ஷிஹாப் ஷரீப், அவரது பாரியார் பர்ஸானா மாக்கர் ஆகியோர் தொடர்பில் இந்தியாவில் நடைபெற்றுவந்த நீதிமன்ற சட்ட நடவடிக்கைகள் முடிந்துள்ளதாக அறிகிறோம். சர்வதேச பொலிஸாரினால் தேடப்பட்டுவரும் இவர்களை இலங்கைக்கு நாடு கடத்துவது மூலம் இலங்கையின் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள எங்களுக்கு ஏதாவது நன்மை கிடைக்குமென்று நம்புகிறோம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மை கிட்டும் வகையில் இது தொடர்பில் நேரடியாகத் தலையிட்டு இவர்களை இலங்கைக்கு நாடு கடத்துமாறு ஜனாதிபதி அடங்கலாக துறைக்குப் பொறுப்பான அதிகாரிகளை கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், மட்டக்களப்பு, பொத்துவில், கல்முனை, சம்மாந்துறை நீதிமன்றங்களில் இவர்களுக்கு எதிராக 100இற்கும் மேற்பட்ட வழக்குகள் பதியப்பட்டுள்ளன. கடந்த 2020.09.10 அன்று நாடாளுமன்றத்தில் கூட இது தொடர்பில் திகாமடுல்ல மாவட்ட எம்.பி. ஹரிஸினால் பேசப்பட்டது. 2020.11.08 அன்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார். சர்வதேச பொலிஸாரின் அறிவித்தாலும் வெளியிடப்பட்டுள்ளது. இப்படியான இந்த மோசடி விடயத்தில் ஜனாதிபதி தலையிட்டு உரிய நியாயத்தைப் பெற்றுத்தர வேண்டும். இது நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு சற்று ஆறுதலளிக்கும் விடயமாக அமையும். இதனால் பாதிக்கப்பட்ட நாங்கள் கடுமையான கஷ்டங்களிலும், மன உளைச்சலிலும் இருக்கின்றோம்.

அண்மையில் நிதிமோசடியில் சிக்கி பேசுபொருளாக மாறியிருக்கும் திலினி பிரியமாலினியிடமும் எமது காசு முதலீடு செய்திருக்கலாம் என்று சந்தேகிக்கின்றோம். திலினி விடயத்தில் துரிதமாக செயற்படும் புலனாய்வுப் பிரிவு எங்களின் விடயத்திலும் அதே நிலையில் இயங்கினால் சிறப்பாக இருக்கும் என்று நம்புகின்றோம். இது விடயமாக நிறைய வழக்குகள் கிடப்பில் இருக்கின்றன. எங்களுக்கு நீதியை பெற்றுத்தர சகலரும் முன்வர வேண்டும் - என்றனர்.

# போடியார் புலம்பல்!



*சகலரும் ஓரணியில் பயணித்தால் நாடு மீளெழுச்சி பெறுமாம் எண்டு மகிந்த மாமா சொல்லி இருக்காரு எலுவா?*

*அடே நாசமறுவானே, ஒரே அடியா உங்கட குடும்ப ஆட்சி எப்ப தொலையுதோ அப்பதாண்டா நாடு சோக்கான நாடாக மாறும். அது மட்டும் இது நடக்காது..!*

*தனியா நரி பயணிக்க மேற்குலகம் உதவும் இதுதான் உண்மை.*

# அதிகாரப்பகிர்வு விடயத்தில் இரட்டை நிலைப்பாட்டை கைவிட வேண்டும்

## தமிழ்க் கூட்டமைப்பிடம் ஹரீஸ் எம்.பி. வேண்டுகோள்

(சாய்ந்தமருது நிருபர்)

அதிகாரப்பகிர்வு விடயத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டிருக்கின்ற இரட்டை நிலைப்பாட்டை உடனடியாக கைவிட வேண்டும் - என்று திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கல்முனை விவகாரத்தில் விட்டுக்கொடுப்பு செய்வதற்கு தமிழ்த் தரப்பு முன்வராவிட்டால் இனப்பிரச்சினைத் தீர்வு மற்றும் அதிகாரப்பகிர்வு விடயத்தில் முஸ்லிம் சமூகம் புரிந்துணர்வோடு ஒன்றித்து பயணிக்க முடியாத துர்ப்பாக்கியம் ஏற்படலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சமகால அரசியல் விடயங்கள் குறித்து நேற்று முன்தினம் (30) கல்முனையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் உட்பட மாநகர சபை உறுப்பினர்கள் சிலரும் கலந்துகொண்டிருந்த இந்நிகழ்வில் ஹரீஸ் எம்.பி. மேலும் தெரிவிக்கையில்;

இந்த நாட்டில் மத்திய அரசுடன் முழுமையாக இருந்து நிர்வாகம் செய்யமுடியாது என்பதற்காகத்தான் 1948ஆம் ஆண்டு தொடக்கம் சமஷ்டி தீர்வின் அடிப்படையிலான அதிகாரப்பகிர்வின் ஊடாக வடக்கு, கிழக்கில் ஒரு தனியான நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும் என தமிழ்ச் சமூகம் கோரி வருகின்றது. அதற்காக பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. அதில் நியாயமும் இருந்தது. அதனால்தான் எமது பெருந்தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப், முன்னாள் செனட்டர் மசூர் மௌலானா போன்றோர் தமிழ்த் தலைமைகளுடன் இணைந்து அப்போராட்டங்களில் முக்கிய பங்காற்றியிருந்தனர். எங்களுடைய இப்போதைய தலைவர் ரவூப் ஹக்கீம் கூட தமிழ் சமூகத்தின்



அதிகாரப்பகிர்வுக்காக பாடுபடுகின்ற ஒருவராக இருக்கின்றார்.

இந்நிலையில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் யாழ்ப்பாணத்தில் ஒரு கொள்கையுடனும் அம்பாறையில் இன்னொரு கொள்கையுடனும் செயற்படக்கூடாது என்று நான் வேண்டுகோள் விடுக்கின்றேன். மத்திய அரசின் கீழ் தமது நிர்வாகத்தை முழுமையாக செய்ய முடியாது என்பதற்காகத்தான் மாகாண நிர்வாக அதிகாரத்தைக் கோருகின்ற தமிழ்த் தரப்பினர் அம்பாறை மாவட்டத்தில் கிட்டத்தட்ட 67 வீதமான தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில், இங்கு மொழி ரீதியாக ஒரு கரையோர மாவட்டத்தை உருவாக்குவதற்கு நாங்கள் முயற்சிக்கின்றபோது, அதற்கு முட்டுக்கட்டை போட்டுக்கொண்டு, அவ்வாறான ஒரு மாவட்டம் உருவாகிவிடக்கூடாது என்ற அடிப்படையில் உள்ளக அரசியலை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக, கல்முனை விவகாரத்திலும் கூட தமிழ் பேசும் முஸ்லிம்களுடன் இணைந்து நிர்வாகம் செய்ய முடியாது எனக் கூறுகின்ற தமிழ்த் தரப்பினர், அம்பாறை மாவட்ட நிர்வாகம் என்று வருகின்றபோது தமிழ் மொழி ரீதியிலான கரையோர மாவட்டத்தை மறுதலித்து சிங்கள மொழி ரீதியிலான நிர்வாகத்தினருடன் இணைந்து செயற்படத் தயார் என்கின்றனர். ஒட்டுமொத்தமாக வடக்கு, கிழக்கு என்று வருகின்றபோது பெரும்பான்மையின ஆட்சியையும் சிங்கள மொழியையும் நிராகரித்து வருகின்ற நிலையில்தான் கல்முனை மற்றும் கரையோர மாவட்ட விவகாரங்களில் மாற்று நிலைப்பாட்டை எடுக்கின்றனர். இத்தகைய இரட்டை நிலைப்பாட்டைத்தான் தமிழ்க் கூட்டமைப்பு கைவிட வேண்டும் எனக் கோருகின்றேன். தலைவர் சம்பந்தன் ஐயா, சுமந்திரன் எம்.பி. மற்றும் தமிழ் எம்.பி.க்களிடம் இதனை மிகவும் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்துகின்றோம்.

இந்த விவகாரத்தில் நாங்கள் பாரிய அழுத்தங்களுடன் செயற்பட்டுக்கொண்டிருக்கிறோம். தலைவர் ரவூப் ஹக்கீமும் இந்த விடயத்தில் மிகவும் கரிசனையும் ஒத்துழைப்பு வழங்கிவருகின்றார். ஏனைய முஸ்லிம் எம்.பிக்களுடனும் பேசியிருக்கின்றோம். அவர்களும் உரிய இடங்களில் தேவையான ஒத்துழைப்புகளை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றனர்- என்று ஹரீஸ் எம்.பி. மேலும் குறிப்பிட்டார்.

# மட்டு. சீயோன் தேவாலய தற்கொலை குண்டுதாரியின் உடற்பாகத்தை இந்து மயானத்தில் புதைத்த விவகாரம்

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் உள்ளிட்ட நால்வரும் வழக்கிலிருந்து விடுதலை

மட்டக்களப்பு சீயோன் தேவாலய தற்கொலை குண்டுதாரியின் உடற்பாகங்களை கள்ளியங்காடு இந்து மயானத்தில் புதைத்தமைக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் உள்ளிட்ட 5 பேருக்கு எதிராக மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு விசாரணைகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், இணைப்புச் செயலாளர் யோ.றொஸ்மன், இளைஞர் ஒருங்கிணைப்பாளர் அனோஜன், மாநகர சபை உறுப்பினர்களான செல்வி மனோகரன், அருள்தாஸ் சுசிகலா ஆகியோருக்கு எதிராக மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணையானது மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி பீற்றர்போல் முன்னிலையில் நேற்று (31) நடைபெற்றுள்ளது.

குறித்த வழக்கு விசாரணைக்கு பொலிஸ் தரப்பினர் சமுகமளிக்காதமையினால் நேற்று 31ஆம் திகதிக்கு வழக்குடன் தொடர்புடைய நால்வரும் விடுவித்து விடுதலை செய்யப்பட்டதுடன் குறித்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் கடந்த 2019 ஏப்ரல் உயிர்த்த ஞாயிறு குண்டுதாக்குதலை மேற்கொண்ட காத்தான்குடியைச் சேர்ந்த தற்கொலை குண்டுதாரியான ஆசாத்தின் உடற்பாகத்தை கள்ளியன்காடு இந்து மயானத்தில் பொலிஸாரால் புதைக்கப்பட்டிருந்தது. இதனை எதிர்த்து கடந்த 2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 27ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்தமை தொடர்பாகவே குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் உள்ளிட்ட நால்வர் நீதிமன்ற வழக்கிற்கு சமுகமளித்துள்ள நிலையில், நால்வரும் வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

# அட்டாளைச்சேனை சமுர்த்தி வங்கிக் கட்டடத்தை புனரமைத்துத் தர கோரிக்கை

## முஷாரப் எம்.பியிடம் மகஜர் கையளிப்பு




(திராய்க்கேணி நிருபர்)

அட்டாளைச்சேனை சமுர்த்தி வங்கிக் கட்டிடம் பூரணப்படுத்தப்படாத நிலையில் இயங்கி வருகின்றது. இது விடயமாக அண்மையில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப்பை அட்டாளைச்சேனை சமுர்த்தி அபிவிருத்தி முன்னணியினர் சந்தித்தனர்.

மேற்படி முன்னணியின் தலைவர் எம்.எவ்.நவாஸினால் இக்கட்டிடத்தினை முழுமையாக பூரணப்படுத்தித் தருமாறு முஷாரப் எம்.பியிடம் மகஜர் கையளிக்கப்பட்டது. இதில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமது ஷாபிர் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர் நஹீஜா முசாபிர் சட்டத்தரணி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பில் கரையோர டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை முன்னெடுப்பு



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய அதிகாரி ஜி.சுகுணனின் வழிகாட்டலின் கீழ் களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட மாபெரும் கரையோர டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை நேற்று முன்தினம் (30) மண்முனை தென்எருவில்பற்று பிரதேசத்தின் கடற்கரையை அண்டிய பகுதியில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மண்முனை தென்எருவில்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட குருக்கள்மடம் தொடக்கம் பெரியகல்லாறு வரையிலான கடற்கரைப் பகுதி முழுவதும் இதன்போது சுத்தம் செய்யப்பட்டதுடன், டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் அடையாளம் காணப்பட்டு அழிக்கப்பட்டதோடு, பிளாஸ்ரிக், போத்தல்கள், கலன்கள் போன்றனவும், இதன்போது சிரமதானத்தின் மூலம் அப்புறப்படுத்தப்பட்டன.

இச்செயற்பாட்டிற்கு, மண்முனை தென்எருவில்பற்று பிரதேச செயலகம், பிரதேச சபை, வைத்தியசாலைகள், இராணுவத்தினர், பொலிஸார், அரச சார்பற்ற அமைப்புகள், உள்ளூர் பொது அமைப்புக்கள். பொதுமக்கள் எனப் பலரும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர்.



# கல்முனையில் மார்பகப் புற்றுநோய் சிகிச்சை நிலையம் திறந்துவைப்பு



(பைஷல் இஸ்மாயில்)

கல்முனை பிராந்தியத்தில் அதிகரித்துவரும் மார்பகப் புற்றுநோயை கட்டுப்படுத்தும் வகையில் வாரந்தோறும் வெள்ளிக்கிழமை தினத்தில் விசேட வைத்திய ஆலோசனை வழங்கப்படுவதோடு மார்பக சத்திர சிகிச்சையும் நடைபெறவுள்ளதாக சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ஏ.டபிள்யு.எம்.சமீம் தெரிவித்தார்.

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் இரா.முரளீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற மார்பகப் புற்றுநோய் சிகிச்சை நிலைய திறப்பு விழாவில் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ஏ.டபிள்யு.எம்.சமீம் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இத்திட்டத்தின் மூலம் ஆலோசனையுடன் சேவைகள் வழங்குவதற்கும் அவசர பரிசோதனைகள் நடத்தி நோயின் அறிகுறிகள் பாதிப்பு குறித்து கண்டறிந்து அவசர சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்குமான நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ஏ.டபிள்யு.எம்.சமீம் மேலும் தெரிவித்தார்.

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் மார்பகப் புற்றுநோய் சிகிச்சை நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டு, அதற்கான தனியான சேவை நிலையமும் திறந்துவைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# 38 வருட கல்விப் பணியிலிருந்து மட்டு. மத்தி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஓய்வு

(மீராவோடை நிருபர்)



மட்டக்களப்பு மத்தி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.யூ.எம்.இஸ்மாயில் தனது 38 வருட கல்விப் பணியிலிருந்து நவம்பர் முதலாம் திகதி ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார்.

ஓட்டமாவடியைச் சேர்ந்த ஏ.பி.முகம்மது உசனார் - எம்.ஐ.பாத்து முத்து தம்பதிகளுக்கு 1962ஆம் ஆண்டு 10ஆம் மாதம் 7ஆம் திகதி மகனாகப் பிறந்த இவர், தனது ஆரம்பக் கல்வி முதல் உயர் தரம் வரை ஓட்டமாவடி தேசிய பாடசாலையில் கற்றுள்ளார்.

1984ஆம் ஆண்டு 12ஆம் மாதம் 27ஆம் திகதி ஆசிரியர் நியமனம் பெற்று தனது முதலாவது ஆசிரியர் பணியை குருநாகல், இப்பாகமுவ மடிகே முதுந்துவ முஸ்லிம் வித்தியாலயத்தில் இணைந்து சேவையாற்றினார்.

1988ஆம் ஆண்டு 3ஆம் மாதம் 15ஆம் திகதி அட்டாளச்சேனை ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் இணைந்து பயிற்சியை முடித்த இவர், சொந்த ஊரான ஓட்டமாவடி தேசிய பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றினார்.

அதைத் தொடர்ந்து, 1994ஆம் ஆண்டு பிறைந்துறைச்சேனை சாதுலியா வித்தியாலயம், 1995ஆம் ஆண்டு ஓட்டமாவடி தேசிய பாடசாலை, 1999ஆம் ஆண்டு பிறைந்துறைச்சேனை அஸ்ஹர் வித்தியாலயம், 2000ஆம் ஆண்டு மீராவோடை அல்-ஹிதாயா வித்தியாலயம், 2001ஆம் ஆண்டு ரிதிதென்ன இக்ராஹ் வித்தியாலயம் ஆகியவற்றில் சேவையாற்றியுள்ளார்.

2005ஆம் ஆண்டு 01ஆம் மாதம் 25 ஆம் திகதி ரிதிதென்ன இக்ராஹ் வித்தியாலயத்திற்கு அதிபராக நியமிக்கப்பட்ட இவர், தனது சேவைக் காலத்தில் கல்வி நடவடிக்கைகளை மிகவும் சிறப்பாக முன்னெடுத்து வந்தார்.

பின்னர் 2010ஆம் ஆண்டு மாவடிச்சேனை இக்பால் வித்தியாலயத்தில் பணிபுரிந்த இவர், 2014ஆம் ஆண்டு பிறைந்துறைச்சேனை சாதுலியா வித்தியாலயத்தில் அதிபர் கடமையை பொறுப்பேற்று சேவையாற்றினார்.

அத்துடன், 2014ஆம் ஆண்டுமுதல் 2017ஆம் ஆண்டுவரை கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி அதிபர் சங்கத் தலைவராகவும் செயற்பட்டு வந்துள்ளார்.

2019ஆம் ஆண்டில் செம்மண்ணோடை அல்-ஹம்றா வித்தியாலயத்தில் இணைந்து கொண்ட இவர், அதே ஆண்டில் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திற்கு முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்று தனது பணிகளை திறன்படச் செய்துவந்தார்.



# உலக செய்திகள்

# 141 பேரை பலியெடுத்த மோர்பி தொங்கு பாலம்

## • அதிர்ச்சியில் இந்தியா; விபத்துக்கு குஜராத் அரசு முழுப் பொறுப்பேற்பு

## • பிரதமர் மோடி இன்று நேரில் ஆய்வு

## • பாலத்தைப் புதுப்பித்த கட்டுமான நிறுவனத்தைச் சேர்ந்த 9 பேர் கைது

குஜராத், மோர்பி தொங்கு பாலம் அறுந்து வீழ்ந்த விபத்தில் குழந்தைகள், பெண்கள் உட்பட 141 பேர் உயிரிழந்துள்ளதுடன், 177 பேர் மீட்கப்பட்டுள்ளனர். அதில் பலர் படுகாயமடைந்துள்ளனர். அத்தோடு 60 பேர் காணாமல்போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கோர விபத்துக்கு குஜராத் அரசு முழுப் பொறுப்பேற்றுள்ளதுடன், விபத்து தொடர்பாக பாலத்தைப் புதுப்பித்த கட்டுமான நிறுவனத்தைச் சேர்ந்த 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


விபத்தில் பலியானவர்களின் குடும்பத்தினருக்கு இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மூ, பிரதமர் மோடி, தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தையடுத்து குஜராத்தில் நேற்று பங்கேற்கவிருந்த சில நிகழ்ச்சிகளை பிரதமர் மோடி இரத்துச் செய்துள்ளதுடன், விபத்து நடந்த இடத்தில் பிரதமர் மோடி இன்று நேரில் ஆய்வுசெய்து மீட்புப் பணிகளை பார்வையிடவுள்ளார்.

கடந்த 19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின்போது குஜராத் மாநிலத் தலைநகர் காந்தி நகருக்கு மேற்கே 240 கிலோமீற்றர் தொலைவிலுள்ள மோர்பி நகரிலுள்ள மச்சு நதி மீது 230 மீற்றர் நீள தொங்கு பாலம் அமைக்கப்பட்டது. பொதுமக்கள் சுற்றுலா வரும் முக்கிய இடமாக இந்தப் பாலம் திகழ்கிறது.

கடந்த 6 மாதங்களாக அந்தப் பாலத்தில் தனியார் நிறுவனம் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டு வந்தது. இதையொட்டி மூடப்பட்டிருந்த அந்தப் பாலம், புனரமைப்புப் பணிகள் முடிந்து கடந்த ஒகஸ்ட் 26ஆம் திகதி குஜராத்தி புத்தாண்டன்று மீண்டும் திறக்கப்பட்டது.

இந்நிலையில், சாத் பூஜா எனப்படும் வடமாநில திருவிழாவுக்காக நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை, சுமார் 500 பேர் மோர்பி தொங்கு பாலத்தின் மீது திரண்டிருந்தனர். சுற்றுலாத் தலமாக விளங்கும் அந்தப் பாலத்தில் அதிகளவில் மக்கள் அனுமதிக்கப்பட்டதன் விளைவாக அதிக எடையைத் தாங்க முடியாது பாலம் திடீரென அறுந்து வீழ்ந்துள்ளது. குழந்தைகள், பெண்கள் உட்பட சுமார் 400இற்கும் மேற்பட்டோர்



ஆற்றில் வீழ்ந்தனர். பலர் பாலத்தின் விழுந்த பகுதியைப் பிடித்துக்கொண்டு தொங்கியபடி உயிருக்குப் போராடினர்.

விபத்து குறித்த அறிந்த உள்ளூர் மக்கள், பொலிஸார் மற்றும் தீயணைப்புத் துறையினர் முதலில் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். ஆற்றிலிருந்து சடலங்கள் மீட்கப்பட உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகரித்தவண்ணம் இருந்தது. (பத்திரிகை அச்சுக்குச் செல்லும் வரை) 141 பேர் உயிரிழந்து விட்டதாகவும் 177 பேர் மீட்கப்பட்டுள்ளதுடன், 19 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடியவிடிய நடைபெற்ற மீட்புப் பணிகளில் முப்படைகள் மற்றும் தேசியப் பேரிடர் மீட்புப் படையின் 10 குழுக்களும் ஈடுபட்டனர்.

குறித்த பகுதியில் போதிய மின்விளக்கு வசதி இல்லாமலிருந்ததும் மீட்புப் பணிக்கு பின்னடைவாக



இருந்துள்ளது. குஜராத் முதலமைச்சர் பூபேந்திர பட்டேல் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து மீட்புப் பணிகளைப் பார்வையிட்டார். மருத்துவமனையில் காயமடைந்தவர்களையும் நேரில் சந்தித்து அவர் ஆறுதல் கூறினார். பின்னர் மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

இந்தக் கோர விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு மாநில அரசு தலா 4 இலட்சம் ரூபாவும், மத்திய அரசு தலா 2 இலட்சம் ரூபாவும் நிவாரணமாக அறிவித்துள்ளது. குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மூ, பிரதமர் மோடி உள்ளிட்டோர் பலியானவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

முழு இந்தியாவையும் உலுக்கிய இந்த விபத்தில் ராஜ் கோட் தொகுதி பாரதீய ஜனதா கட்சி எம்.பியின் குடும்பத்தைச் சேர்ந்த 12 பேர் இறந்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

சுமார் 140 ஆண்டுகளுக்கு முன், மரம், கேபிள்கள் மூலம் கட்டப்பட்ட இந்தப் பாலத்தில் ரூ. 2 கோடியில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கடந்த 26ஆம் திகதி மக்கள் பாவனைக்காக திறக்கப்பட்டது. இக் கோர விபத்துக்கு பாலத்தில் ஏராளமானோர் கட்டுப்பாடின்றி அனுமதிக்கப்பட்டதே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. தொங்கு பாலத்தை புனரமைக்க அரசிடம் டெண்டரைப் பெற்று பணியை மேற்கொண்ட தனியார் நிறுவனம், பணி முடிந்த பின் அதிகாரிகள் பாலத்தின் உறுதித்தன்மையைப் பரிசோதித்து அதற்கான சான்றிதழை அளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.



இந்நிலையில், குஜராத் மோர்பி தொங்கு பாலம் அறுந்து விழுந்த கோர விபத்தால் அதிர்ச்சியடைந்துள்ளோம். இந்தக் கோர விபத்துக்கு குஜராத் அரசு முழு பொறுப்பேற்றதாக தெரிவித்த அம்மாநில அமைச்சர் பிரஜேஷ் மிஸ்ரா, விபத்து குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

**''எங்களால் அவர்கள் எல்லோரையும் காப்பாற்ற முடியவில்லை''**

இந்த அதிர்ச்சிக்குரிய விபத்தை நேரில் கண்ட பலரும் தங்களின் துயர் அனுபவங்களைப் பகிர்ந்து வருகின்றனர். தன்னை வெளிப்படுத்திக்கொள்ள விரும்பாத ஒருவர் தெரிவிக்கையில்,

''என் கண் முன்பாகவே பாலம் இடிந்து வீழ்ந்தது. அது ஓர் அதிர்ச்சியான சம்பவம். நான் மீட்புப் பணியில் இருந்தபோது என்னிடம் வந்த பெண்மணி ஒருவர் தனது மகளின் புகைப்படத்தைக் காட்டி, அவளை மீட்டேனா என்று கேட்டார். நான் அவரது மகள் இறந்துவிட்ட செய்தியை அந்தப் பெண்ணிடம் கூறவில்லை" என்றார். இந்த நபர் இரவு முழுவதும் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்தார்.

விபத்தை நேரடியாக பார்த்த மற்றொரு நபரான சுப்ரான் தெரிவிக்கையில், ''பாலத்தில் நெருக்கடி அதிகமாக இருந்தது. கேபிள் அறுந்து ஒரு நொடிக்குள் பாலம் கீழே விழந்துவிட்டது. அதனால், மக்கள் ஒருவர் மீது ஒருவராக ஆற்றில் விழுந்தனர்'' – என்றார்.

''ஆற்றில் நீந்த முடியாதவர்களை நாங்கள் மீட்டு கரைக்கு ஏற்றிக்கொண்டிருந்தோம். பலர் ஆற்றில் வீழ்ந்திருந்தனர். எங்களால் அவர்கள் எல்லோரையும் காப்பாற்ற முடியவில்லை'' என மீட்புப் பணியில் ஈடுபட்ட மோர்பி நகரவாசியான ரஞ்சன்பாய் பாட்டீல் வேதனையுடன் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, குஜராத்தின் மோர்பி நகர் கேபிள் பாலம் அறுந்து விழுந்த விபத்து குறித்து குறிப்பிடும்போது, "என் வாழ்நாளில் இத்தகைய ஒரு துயரத்தை நான் எப்போதும் கடந்ததில்லை. ஒருபுறம் என் இதயம் வலியில் கனக்கிறது. இன்னொரு புறம் கடமையின் பாதை என்னை அழைக்கிறது" என்று பிரதமர் மோடி உருக்கமாக தெரிவித்துள்ளார்.

**140 ஆண்டுகள் பழைமை வாய்ந்த பாலம்**

குஜராத்தின் மோர்பி நகரில் மச்சூ நதி பாய்கிறது. இந்த நதியின் குறுக்கே 233 மீற்றர் நீளம், 4.6 அடி அகலத்தில் கேபிள் நடைபாலம் அமைக்கப்பட்டிருந்தது. சுமார் 140 ஆண்டுகளுக்கு முன், மரம், கேபிள்கள் மூலம் கட்டப்பட்ட இந்தப் பாலத்தில் ரூ. 2 கோடியில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கடந்த 26ஆம் திகதி மக்கள் பயன்பாட்டுக்கு திறந்துவைக்கப்பட்டது. இந்தப் பாலம் கடந்த 1880ஆம் ஆண்டு ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டது. பாலம் கட்டுவதற்கான பொருட்கள் பிரிட்டனிலிருந்து கொண்டுவரப்பட்டன. இந்நிலையில், 7 மாத புனரமைப்புப் பணிகள் முடிந்து கடந்த புதன்கிழமைதான் பாலம் திறக்கப்பட்டது.

இதற்கு முன்னர் கடந்த 2016ஆம் ஆண்டு கிழக்கு கொல்கத்தா நகரத்தின் போக்குவரத்து நெரிசல் மிகுந்த வீதியில் மேம்பாலம் இடிந்து விழுந்த விபத்தில் 26 பேர் உயிரிழந்தனர். கடந்த 2011ஆம் ஆண்டு வடகிழக்கு மாநிலத்தின் மலைநகரமான டார்ஜிலிங்கில் திருவிழா கூட்டம் நிறைந்திருந்த பாலமொன்று விழுந்ததில் 32 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# 'ப்ளூ டிக்'கிற்கு கட்டணம் அறவிடும் ட்விட்டர்




ட்விட்டரில் அதிகார கணக்கு என்பதற்கான 'ப்ளூ டிக்'கிற்கு மாதந்தோறும் ரூ.1,600 (இந்திய ரூபாப்படி) வசூலிக்க ட்விட்டர் நிறுவனம் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஏற்கனவே ப்ளூ டிக் கணக்குகளுக்கு மாதம் ரூ.400 வசூலிக்கப்பட்டு வந்த நிலையில், அதை ரூ.1600 (இலங்கை ரூபாப்படி 7,124.11) ஆக உயர்த்த எலான் மாஸ்க் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பொதுவாக பிரபலமான நபர்கள், புகழ்பெற்றவர்கள் உள்ளிட்டோரின் ட்விட்டர் பக்கம் அவர்களின் அதிகாரப்பூர்வ பக்கம் என்பதை உறுதிசெய்யும் வகையில் ப்ளூ டிக் வசதி அமைந்துள்ளது.

குறிப்பிட்ட நபருடைய அதிகாரப்பூர்வ கணக்கெனில் அதன் அடையாளமாக ப்ளூ டிக் இருக்கும்.



# இந்தியாவில் புதிய வகை கெரோனா திரிபு கண்டுபிடிப்பு

## தமிழகத்தில் 175 பேருக்கு தொற்று உறுதி

## GISAID அமைப்பின் ஆய்வில் தகவல்; சிங்கப்பூர் உட்பட 17 நாடுகளில் பாதிப்பு

இந்தியாவில் உருமாறிய ஒமிக்ரொன் வகை தொற்றான XBB என்ற தொற்று பரவி வருவதாக GISAID (Global Initiative on Sharing Avian Influenza Data) என்ற சர்வதேச ஆராய்ச்சி அமைப்பின் ஆய்வில் தெரியவந்துள்ளது.

தமிழகம் உட்பட 9 மாநிலங்களில் இவ்வகை பாதிப்புகள் கண்டறியப்பட்டிருப்பதாக இந்த அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

வைரஸின் மாற்றங்களைக் கண்காணித்து வரும் GISAID என்ற அமைப்பின் ஆய்வில் தமிழகத்தில் 175 பேரும் , மேற்கு வங்கத்தில் 103 பேரும் என நாடு முழுவதும் 380 பேர் XBB வகை தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் ஒடிசா, மகாராஷ்டிரா, டில்லி, புதுச்சேரி, கர்நாடகா, குஜராத் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களிலும் இவ்வகை பாதிப்புகள் கண்டறியப்பட்டுள்ளன.

XBB வகை கொரோனா மாறுபாடு முதன்முதலில் சிங்கப்பூரில் கடந்த ஒகஸ்ட் மாதம் கண்டறியப்பட்டது. இதுவரை 17 நாடுகளில் இந்தப் பாதிப்பு பதிவாகியுள்ளது.

# கொங்கோ இசை நிகழ்ச்சியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் பலி



கொங்கோவில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 2 பொலிஸார் உட்பட 11 பேர் உயிரிழந்துள்ளதுடன், பலர் படுகாயமடைந்துள்ளனர்.

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவின் தலைநகர் கின்ஷாசா மைதானத்தில் கொங்கோ பிரபல பாடகர் ஃபாலி இபுபாவின் தலைமையில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கானோர் கடல் அலையாய் திரண்டிருந்தனர்.

கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு நிலைமை மோசமானதால், முண்டியடித்துக் கொண்டு ஏராளமானோர் நிகழ்ச்சி நடைபெறும் மேடை நோக்கிச் செல்ல முயன்றதால் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதனால், அங்கு பயங்கர கூட்ட நெரிசல் ஏற்பட்டது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7